நம் வழி வேளாண்மை

பருவம் 32 ஜூலை – செப்டம்பர் 2023 இதழ் 2

ஜம்னாலால் பஜாஜ் 2015 விருது வழங்கும் விழாவில்
டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதனுடன் எடுத்த படம்

இயற்கைவழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள்
மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

நம் வழி வேளாண்மை

பருவம் 32 ஜூலை – செப்டம்பர் 2023 இதழ் 2

ஆசிரியர்
பெ. விவேகானந்தன்

நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.

நம்வழி வேளாண்மை குழுமம்
பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே

நம் வழி வேளாண்மை
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலைபேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

ஆங்கில இதழ் முகவரி
Prof. Anil Gupta,
Honey Bee,
SRISTI, AES Boys Hostel Campus,
Near Gujarat University Library & SBI Bank,
Navrangpura, Ahmedabad-380 009, Gujarat,
email: honeybee@sristi.org

புலவரின் சமயோஜிதம்

முன்னொரு காலத்தில் புலவர் ஒருவர் மன்னரைப் பாடிப் பரிசில் பெற விழைந்தார். அரண்மனை வாயிலின் முன் இருந்த காவலர் அவரை அனுமதிக்க மறுத்தார். ''நீர் பரிசிலாகப் பெற்று இந்த வாயிலைக் கடக்கும் போது எடுத்துச் செல்லும் பணத்தில் பாதியை எனக்குத் தருவதாய் இருந்தால் உம்மை நான் அனுமதிக்கிறேன்'' என்றார் அக்காவலர். புலவரும் புன்னகைத்தபடியே அதற்கு ஒப்புக்கொண்டு கடந்து உள் வாயிலுக்குச் சென்றார். அங்கிருந்த இரண்டாவது காவலரும் அதே கோரிக்கையை முன் வைத்தார். புலவரும் ஒப்புக்கொண்டு தர்பார் மண்டபத்திற்குள் நுழைய முற்பட்டார். அந்தக்காவலரும் அவரை அனுமதிக்க மறுத்து அந்த வாயிலைக் கடக்கும் போது எடுத்துச் செல்லும் பரிசிலில் பாதியை தனக்கு வழங்கிட வேண்டும் என நிபந்தனை விதித்தார். மூன்றாவது காவலரும் இவ்வாறு பங்கு கேட்கவே அதற்கும் புலவரும் ஒப்புக்கொண்டார்.

பின்னர் உள்ளே நுழைந்து மன்னர் அவையில் சென்று அமர்ந்தார். தனது முறை வந்த போது மன்னரைப் பாடிப் பாராட்டினார். மன்னரும் மகிழ்ந்து ''உமக்கு என்ன பரிசில் வேண்டும்'' என்று கேட்டார். புலவரோ மன்னவா எனக்கு எட்டுக் கசையடிகள் வழங்க வேண்டும் என்று கேட்டார். மன்னருக்கு ஏதோ இதில் விவகாரம் இருக்கிறது என்று புரிந்து என்ன விபரம் என்று விசாரித்தார். புலவரும் அரண்மனை வாயிலில் நடந்தவற்றை எடுத்துச் சொல்லி எட்டில் நான்கை முன் வாயில்மண்டபத்துக்காவலருக்கும், நான்கில் இரண்டை தர்பார் மண்டபத்துக் காவலருக்கும், இரண்டில் ஒன்றை அரண்மனைப் பிரதான வாயில் காவலருக்கும் கொடுத்து தனக்கு ஒரு கசையடி வழங்கக் கேட்டுக் கொண்டார். தனது அதிகாரத்தில் நடக்கும் தவறை உணர்ந்து மன்னனும் காவலர்களுக்குத் தக்க தண்டனை அளித்துக் தனது தவறைச் சுட்டிக்காட்டிய புலவருக்கு உரிய வெகுமதிகளைத் தந்து கௌரவித்தான்.

கர்நாடகா வனத்துறையும் கைவிட்டதால் அழிவின் விளிம்பில் பர்கூர் இன கிடைமாடுகள்

ஈரோடு மாவட்டம், பர்கூர் மலைப்பகுதியில் பர்கூர் பஞ்சாயத்தில் 32 கிராமங்கள் உள்ளன. இங்குள்ள பெரும்பான்மையானோர் லிங்காயத் என்ற கன்னடம் பேசும் மக்களாவார். சிறுபான்மையினத்தவர்களாக சோளிகர் ஊராளி மலைவாழ் மக்களும் வசித்து வருகின்றார். இப்பகுதியில் கேழ்வரகு, நெல், அவரை, வாழை போன்றன புரட்டாசி, ஐப்பசியில் விதைக்கப்பட்டு தை மாதம் அறுவடை நடக்கும். நிலம் உழுவதற்கு காளைகள் தான் பயன்படுத்தப்படுகின்றன. தற்சமயம் டிராக்டர் உபயோகமும் உள்ளது. காளைகளுக்காக பர்கூர் என்ற நாட்டு மாடு வீடு தோறும் வளர்க்கப்படுகிறது. ஒவ்வொர் வீட்டிலும் 5–20 மாடுகள் வரை வளர்க்கின்றனர். இந்த மாடுகள் வெள்ளாமை காலங்களில் கிடைகளாக சேர்த்து மலைப்பகுதிகளில் வனங்களில் 8 மாதங்கள் வரை மேய்ப்பர் இங்கு 40–50 கிடைகள் வரை இருந்து வந்தன. ஒவ்வொரு கிடையிலும் 300–400 மாடுகள் வரை இருக்கும். மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி 4 மாதங்களில் மட்டும் மாடுகள் மாட்டு சொந்தகாரர்களிடம் சென்றுவிடும். பின்னர் கிடைகளில் விட்டுவிடுவார்கள்.

பர்கூர் இன மாடுகளின் எண்ணிக்கை 1991 ல் ஒரு லட்சத்திற்கும் மேலாக இருந்தது. இம்மாடுகள் 100க்கும் மேற்பட்ட கிடைகளில் பராமரிக்கப்பட்டு வந்தன. தற்பொழுது இம்மாடுகளின் எண்ணிக்கை பாதிக்கு மேல் குறைந்து உள்ளன. மொத்தக் கிடைகள் 20 ஆகக் குறைந்துள்ளன. இம்மாடுகள் சுமார் 8 மாதங்களில் வனங்களில் மேய்ப்பதற்காக கிடைகளாக சேர்க்கப்படும். முன்பு இம்மலைப்பகுதியில் சந்தனக்கடத்தல் வீரப்பன் நடமாடியதால் எங்கள் மலை மேய்ச்சலுக்கும் வனப்பகுதியினர் தடை செய்தனர். இதனால் பல விவசாயிகள் மாடுகளை விற்று விட்டனர். பின்னர் சில பகுதிகளில் வனத்துறையினர் கூட்டு வன நிர்வாகத் திட்டத்தில் மரக்கன்றுகளை நட்டதால், மேய்ச்சலுக்குத் தடை விதித்தனர். ஆரம்ப காலத்தில் மேய்ச்சலுக்கு எந்தத் தடையும் வராது என்று கூறி மரம் நட்ட வனத்துறையினர் பின்னர் மலை மேய்ச்சலையே நிறுத்தி விட்டனர். இதனால் வனத்துறையினரின் தொல்லைகளைத் தாங்க முடியாமல் பலர் மாடுகளை விற்றுவிட்டனர். இக்காரணங்களால் சுத்தமான பர்கூர் இன மாட்டு ரகத்தின் எண்ணிக்கை 3000 ஆகக் குறைந்துவிட்டது என்று தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழக அறிக்கை தெரிவிக்கிறது. தமிழ்நாடு வனப்பகுதியில் மாடு மேய்ப்பதற்கு பிரச்சனை இருந்ததால் அண்டை மாநிலமான கர்நாடகா நால்ரோடு கோம்பை பகுதிக்கு சென்று பட்டி அமைத்து மேய்த்து வந்தனர். கர்கேகண்டி என்ற தமிழ்நாடு எல்லைப்பகுதியிலும் பட்டி அமைத்து கர்நாடகா வனப்பகுதியில் 2022 வரை மேய்த்து வந்தனர். 2023 இல் கர்நாடகா வனத்துறையும் மேய்ச்சலுக்கு தடை விதித்தது. இதன் காரணமாக கிடைகளை பராமரிக்க முடியாமல் மாடுகள் லிங்காயத் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டன. தற்பொழுது வெள்ளாமை காலத்திலும் மாடுகளை அவரவர் பகுதியில் மேய்ப்பது மிகவும் சிரமமாக உள்ளது. மக்கள் மாடு வளர்ப்பை முற்றிலும் கைவிடும் நிலைக்கு ஆளாகி உள்ளனர். இதனால் மலைப்பகுதி உழவிற்கு காளை மாடுகள் கிடைப்பதும், நிலத்திற்கு எருவும் கிடைப்பதும் அரிதாகிவிடும். 5.11.2023 அன்று தேவர்மலையில் நடந்த கிடைக்காரர்களின் கூட்டத்தில் வனஉரிமைச் சட்டம் 2006 இன் படி வன மேய்ச்சலுக்கு அனுமதி வழங்க விவாதிக்கப்பட்டு அரசின் பார்வைக்கு எடுத்துச் செல்ல தீர்மானிக்கப்பட்டது.

கீழ்க்கண்ட இடங்களில் கிடைமாடுகள் வனத்தில் மேய்வதற்கும் பட்டி போடுவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என முடிவு செய்யப்பட்டது:

கர்கேகண்டி, போதமலை, பாலக்கோம்பை, இலந்தமரப்பட்டி, மொடக்கோம்பை, தின்னலிப்பட்டி, தோனமடுவு, நொரநொட்டி, முக்கமரத்துப்பட்டி, ஓரத்திக்கோம்பை, அரக்கடபட்டி, கோம்பைப்பட்டி, படுகுதொட்டி, கெத்தட்டி, தொட்டுமுடவு, பூதட்டி,

பொட்டட்டி, கொடகட்டி, கூலமரத்துபட்டி, பெத்துகள் போலி போன்றன.

கடந்த சில ஆண்டுகளில் வனப்பகுதியில் மேய்ச்சல் நிலப்பகுதியில் உன்னிச்செடி என்ற களைச்செடி (Lantana camara) புரவி வருகின்றது. இது முட்கள் கொண்ட விஷச்செடியாகும். இதனால் மாடுகள் மேய்ப்பதற்குத் தடையாக உள்ளது. இதுவும் மாடுகளின் எண்ணிக்கை குறைவதற்கு முக்கியக் காரணமாகும். இச்செடியினால் யானைகளின் மேய்ப்புப் பகுதிக்கும் பாதகம் ஏற்பட்டுள்ளது. இதனை அழித்து மூங்கில் கன்றுகள் நடவு செய்ய மக்கள் யோசனை கூறுகின்றனர்.

பெ. விவேகானந்தன், சேவா

இரத்தினவேலின் இயற்கை நெல்சாகுபடி

நெல் சாகுபடி, நிலத்திற்கு பசுந்தாள் உரங்களான சணப்பு, தக்கைப் பூண்டு போன்றவற்றை ஒரு ஏக்கருக்கு 15 கிலோ அளவில் விளைவிக்க வேண்டும். 50 நாட்களில் அந்த பயிர்கள் பூக்கும் பருவத்தை அடைந்த பின் அதனை மடக்கி உழ வேண்டும். அதற்குப்பின் 2–3 முறை சேற்றுழவு செய்ய வேண்டும். ஒரு ஏக்கரில் நடவு செய்ய 15 சென்ட் நிலத்தில் நாற்றங்கால் விதைகளை விதைக்க வேண்டும்.

ஒரு டிரம்மில் உப்புக்கரைசலை ஊற்றி அதில் ஒரு முட்டையை போட வேண்டும். முட்டை மூழ்காமல் அதன் மேல் பக்கம் தண்ணீருக்கு வெளியே தெரிய வேண்டும். அந்த கரைசலில் நாம் தேர்ந்தெடுத்த நெல் ரகத்தின் விதைகளை சேர்க்க வேண்டும். நல்ல விதைகள் கீழே இருக்க களை விதைகள் மெல்ல வந்து விடும். அவற்றை அகற்றி விட்டு நல்ல விதைகளை சுத்தமான நீரில் உப்புத்தன்மை போகும் வரை கழுவ வேண்டும். பின்னர் அந்த நெல்மணிகளை பஞ்சகவ்ய கரைசலில் ஒரு நாள் ஊற வைக்க வேண்டும். மறுநாள் அதனை ஒரு பையில் கட்டி வைத்து அதன் மேல் ஒரு கனமான பொருளை வைக்க வேண்டும். மூன்று நாட்களுக்கு பின்னர் அந்த விதைகளை நிலத்தில் விதைக்கலாம். நாற்றங்கால் அமைக்கும் முன் வேப்பம்புண்ணாக்கு மற்றும் உயிர் உரங்களான டிரைக்கோடர்மா, சூடோமோனஸ் போன்றவற்றை கலந்தால் வேர் அழுகல் போன்ற நோயை தடுக்கலாம். மேட்டு பாத்தி நாற்றங்கால் தயார் செய்யும்பொழுது மேட்டு பாத்தியில் நன்கு மக்கிய தொழுஉரத்தை தூவி விட வேண்டும். பின்னர் விதைகளை தூவி விட்டு பச்சை நிறவலை அல்லது நெல் இல்லாத வைக்கோலை பரப்பி வைக்க வேண்டும். 15–18 நாட்களில் நாற்றங்காலை கயிறு பிடித்து 1x1 அடி அளவில் நடவு செய்ய வேண்டும். நாற்று நட்டு 10 நாட்களுக்கு பின்னர் தண்ணீருடன் 20 லிட்டர் அமிர்தக்கரைசல் அல்லது புண்ணாக்குக்கரைசலை ஓர் ஏக்கருக்கு கலந்து விட வேண்டும்.

புண்ணாக்குக்கரைசல் தயாரிக்கும் முறை :

ஆமணக்கு புண்ணாக்கு, தேங்காய் புண்ணாக்கு, வேப்பம் புண்ணாக்கு, எள்ளுப்புண்ணாக்கு, கடலை புண்ணாக்கு, புங்கம் புண்ணாக்கு, இலுப்பை புண்ணாக்கு. இந்த 7 வகை புண்ணாக்கு ஒன்றாக சேர்த்து இதிலிருந்து ஒரு கிலோ எடுத்து 20 லிட்டர் மாட்டு கோமியத்தில் ஊற வைக்க வேண்டும். இதில் ஒரு கிலோ நாட்டு வெல்லம் சேர்த்து 20 நாட்கள் புளிக்க விட வேண்டும். இந்த புளித்த கரைசலில் இருந்து 500 மி.லி. எடுத்து 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் அல்லது பாசனநீரில் விடலாம். இது பயிருக்கு உரமாகவும் பூச்சி நோய்களுக்கு எதிர்ப்பு சக்தியையும் கொடுக்கிறது.

நாற்றுக்களை 1 x 1 அடி இடைவெளியில் நடுவதால் காற்றோட்டம் சூரிய வெளிச்சம் எளிதாக கிடைக்கும். எலித்தொல்லை இருக்காது. கோனோ வீடர் மூலம் களைகளை அகற்றவும் எளிதாக இருக்கும். கோனோவீடர் மூலம் களைகளை அகற்றவும் எளிதாக இருக்கும். கோனோ வீடர் மூலம் களை எடுப்பதற்கு முன் ஓர் ஏக்கருக்கு 5 கிலோ எம்என். (micro nutrient mixture)-ரை மணலோடு கலந்து தூவி விட வேண்டும். களைகளை அகற்றிய மறுநாள் மீன் அமிலம், புண்ணாக்குக் கரைசல் போன்றவற்றை நீருடன் கலந்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். 40–50

நாட்களுக்குள் இரு முறை பஞ்சகவ்யம் அல்லது மீன் அமிலம் தெளிக்கலாம். கதிர் வந்தபின் பஞ்சகவ்யம் தெளிக்க கூடாது. அதுபோல் மஞ்சள்நிற ஒட்டும் பொறி மற்றும் டி வடிவ குச்சிகள் வைப்பதனால் பூச்சி தாக்குதலை தவிர்க்கலாம்.

வரப்பு ஓரங்களில் 200–300 கிராம் உளுந்தை எல்லைப் பயிராக நடுவதன் மூலம் பூச்சி தாக்கம் குறைகிறது. 60–90 நாட்களில் உளுந்தையும் அறுவடை செய்து கொள்ளலாம். எல்லைப் பயிராக புதினாவையும் பயிர் செய்யலாம். மீன் அமிலம் தெளிப்பதன் மூலம் எலித்தொல்லை குறைகிறது. வேறு நோய் தாக்குதல் அல்லது பூச்சி தாக்குதல் தென்பட்டால் மூலிகை பூச்சி விரட்டி அல்லது கற்பூர கரைசல் / வேப்ப எண்ணெய் / புங்கம் எண்ணெய் கரைசலை தெளிக்கலாம்.

இரத்தினவேல்
4/1, திருவள்ளுவர் வீதி, ஜீவாநகர், செய்யாறு தாலுகா
திருவண்ணாமலை –604407. செல் : 9842397280

டிராக்டரை ஜே.சி.பியாக உபயோகப்படுத்துதல்

ஈரோடு மாவட்டம், குளத்துப்பாளையத்தில் திரு. பாஸ்கரன் (53 வயது) 10ஆம் வகுப்பு வரை படித்து விட்டு விவசாயம் செய்து வருகிறார். இவர் சொந்தமாக 10 ஏக்கர் நிலம் வைத்து கரும்பு பயிரிட்டுள்ளார். இவரது ஒரே மகள் பி.இ. படித்து வருகிறார். கொரோனா காலத்தில் இவர் ஜே.சி.பி. இயந்திரத்திற்கு மாற்றாகக் கருவியை வடிவமைக்க தீவிரமாக யோசித்து, தனது டிராக்டரை ஜே.சி.பி யாக மாற்றி உள்ளார். அதன்படி இக்கருவியை மாற்றி அதற்கு பி.எஸ்.இ என்று பெயரிட்டார்.

விவசாய கூலி ஆட்கள் பிரச்சனை இருப்பதால் இந்த இயந்திரத்தை தயாரிக்க முடிவு செய்தார். பாசனத்திற்காக வாய்க்கால், குழி தோண்டுவது போன்ற விவசாயத் துறையில் உள்ள பணிகளுக்கு இந்த கண்டுபிடிப்பு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இந்த இயந்திரம் வணிகமயமாக்கப்பட்டுள்ளது. இவர் இதுவரை 7 இயந்திரங்களை விற்றுள்ளார். இந்த இயந்திரத்தை உருவாக்க சுமார் 4–5 லட்சம் வரை செலவு செய்துள்ளார்.

இந்த இயந்திரத்தை ரூ. 5,20,000 என விற்பனை செய்து வருகிறார். இவர் இந்த இயந்திரத்திற்கு காப்புரிமை பெறவும் முயற்சி செய்து வருகிறார்.

பயன்கள் :

நீர்ப்பாசன கால்வாயை உருவாக்க உதவுகிறது. அதிக நிலப்பரப்பை விரைவில் சுத்தம் செய்தல், பாறாங்கல், குப்பை, மரங்கள் மற்றும் குழாய்களை அகற்றுதல் போன்றன விரைவில் வேலை ஆட்கள் துணையில்லாமலேயே செய்து விடலாம். இது ஒரு மணி நேர வேலைக்கு 1–1.5 லிட்டர் தேவை. ஒரு மணி நேரத்திற்கு வாடகை பணம் ரூ. 600 மட்டும் தான். அதே சமயம் நவீன ஜே.சி.பி. இயந்திரத்திற்கு ரூ. 1200 வரை செலவாகும். இந்த கருவியின் உதிரி பாகங்கள் எளிதாகக் கிடைக்கும்.

திரு. பாஸ்கரன்
குளத்துபாளையம், காகம் அஞ்சல், சிவகிரி வழி,
ஈரோடு மாவட்டம் –638109. செல் : 9942581333

கோவிந்தனின் கால்நடை மூலிகை வைத்யம்

சேலம் மாவட்டம் அயோத்திபட்டணத்தில் பால் கறவையாளராக வேலைபார்க்கும் திரு. கோவிந்தன் தற்சமயம் உடல் நிலை காரணமாக ஓய்வில் உள்ளார். இவர் 2012ம் ஆண்டு தேசிய கண்டுபிடிப்பு நிறுவனம் மூலம் மடிநோயை குணப்படுத்தும் மூலிகை மருந்திற்காக ஜனாதிபதி விருதும், காப்புரிமையும் பெற்றுள்ளார். விருது பெற்றபின் இவரின் கால்நடை மூலிகை வைத்யமுறை மக்களிடையே நல்ல வரவேற்பும், சிறப்பும் பெற்றுள்ளது. இப்பகுதியில் கால்நடை வளர்ப்போர் இவருக்கு அடிக்கடி தொலைபேசியில் வைத்திய முறைகளைக் கேட்டு பின்பற்றி வருகின்றனர். இவருடைய கால்நடை வைத்திய முறைகள் நம் வழி வேளாண்மை பழைய இதழில் வெளிவந்துள்ளது.

பால்கறவைமாடுகளில் மடிநோய்க்கு:

பால்கறவை மாடுகளில் இந்நோய் பரவும். இந்த நோயை நோய் வந்த ஆரம்பகாலத்திலேயே கண்டுவிட்டால் இதற்கு மஞ்சள் பூசணி 10 இலை எருக்கம்பால் 5 சொட்டு, சுண்ணாம்பு பாக்களவு, மிக்சியில் போட்டு அரைத்த களிம்பை மடியில், காம்புகளில் பூச வேண்டும். பூசுவதற்கு மின் சுடுநீரில் மடியை சுத்தம் செய்ய வேண்டும். இதனை காலை, மாலை 2 வேளை 2 நாட்கள் தொடர்ந்து. கடைபிடித்தால் போதுமானது. நோய் முற்றிவிட்டால் 3 நாட்கள் மருந்து தடவிவர வேண்டும்.

சளிக்கு

தும்பை, துளசி, வேலிப்பருத்தி, சிறியாநங்கை, கற்பூரவள்ளி, பூண்டு, மிளகு, சேர்த்து அரைத்து 50 மி.லி. எடுக்க வேண்டும். இதனை உள்ளே 2 நாட்கள் சாப்பிடவேண்டும்.

மாடுகளுக்கு குந்து (காய்ச்சல்)

வேலிப்பருத்தித்தழை, குப்பைமேனித்தழை (புண்ணாக்குப்பூண்டு), துளசி ஒவ்வொன்றும் கைப்பிடிஅளவு, மிளகு 20 கிராம், பூண்டு 50 கிராம், சின்ன வெங்காயம் 5 சேர்த்து இடித்து உருண்டை பிடிக்க வேண்டும். இதை சுடுநீரில் 1 லிட்டரில் கலந்து (2 கொட்டான் அளவு) உள்ளே தர வேண்டும். இதனை 2–3 நாட்கள் கடைபிடிக்க வேண்டும்.

மாடு நீர் குடிக்காமலிருந்தால்

பிரண்டை, கைப்பிடிஅளவு உப்புக்கல்லு 10 கிராம், மிளகு, பூண்டு, பெருங்காயம்கட்டி (ரயில் பெட்டி பிராண்ட்) 50 கிராம், சின்ன வெங்காயம் 50 கிராம் சேர்த்து இடித்து ஒரு நாளைக்கு 2 வேளை 3 நாட்கள் கடைபிடிக்க வேண்டும்.

படுத்தமாடு எழுந்திருக்க

முகத்தில் சுடு நீர் (கைபொறுக்கும் சூடை விட சற்று அதிகமாக இருக்க வேண்டும்) முகத்தில் ஊற்றிவிட வேண்டும். இதனால் மாடு துள்ளி எழுந்திருக்க ஆரம்பிக்கும். அப்போது மனிதர்களின் உதவியால் எழுப்பி விடலாம்.

கறவை மாடுகளில் பால் கூட

மாடு தீனி சரியாக எடுக்காவிட்டால் கறக்கும் பாலின் அளவு குறையும். இதற்கு மிளகு 50 கிராம், பூண்டு 100 கிராம், சுக்கு அல்லது இஞ்சி 100 கிராம், பெருங்காயம் 50 கிராம், உப்பு 100 கிராம், சோடா உப்பு 50 கிராம் சேர்த்து அரைத்து உள்ளே தர வேண்டும். இதனால் மாடு நன்றாக தீனி எடுக்கும். பின்னர் பாலின் அளவு கூடும்.

மடி வெடிப்பிற்கு

பசுமாட்டு வெண்ணெயுடன் முடக்கத்தான் அரைத்து உள்ளே தர வேண்டும். வெட்டுவாந்தழையை அரைத்து மடியில் வெளிப்புற பூச்சாக பூசி விட வேண்டும். இவருடைய மனைவி திருமதி இராசாத்தி சிறுநீரகக் கல்லுக்கு வாழைத்தண்டுச்சாறு, நெருஞ்சித்தழை கைப்பிடி அளவு, இரணகள்ளிதழை –1 இலை, சீரகம் 10 கிராம், 1 கரண்டி நாட்டு சர்க்கரை அரைத்து கலந்து 15 நாட்கள் தர வேண்டும் எனக் கூறுகிறார்.

ந. கோவிந்தன், பாரம்பரிய வைத்யர், த/பெ. நல்லுடையான், இந்தியன் வங்கி எதிர்புறம், முருகன் தோட்டம், அயோத்யபட்டிணம், சேலம் மாவட்டம்,
செல் : 9364222078

பிரான்சில் இயற்கை விவசாயிகளை தேடி 1,000 கி.மீ தூர நடைப்பயணம்

2021இல் கோவிட் 19 பரவலால் ஆப்ரிக்கா கண்டத்தில் போகோ என்ற நாட்டிற்கு செல்ல முடியவில்லை. ஆப்ரிக்காவில் கிராமப் பகுதியில் விவசாயிகளுக்கு உள்ளூர் வளங்களைக் கொண்டு வாழ்வாதரத்தை முன்னேற்றும் எனது திட்டம் நிறைவேறவில்லை. இச்சமயத்தில் நான் குடியிருக்கும் பிரான்ஸ் நாட்டில் தனி ஒருவனாக வாகனம் எதுவுமில்லாமல் நடைப்பயணம் மேற்கொள்ளலாம் என நினைத்துப் புறப்பட்டேன். பிரான்சில் இயற்கை விவசாயம் செய்யும் விவசாயிகளை நேரடியாக சந்தித்து உரையாட இந்த நடைப்பயணத்தைப் பயன்படுத்திக் கொண்டேன். என்னுடைய உடைமைகளை ஒரு சிறு தள்ளு வண்டியில் வைத்து உருட்டிச் சென்றேன். நாள் முழுவதும் பகல் பொழுதில் நடந்தே சென்று விவசாயிகளைச் சந்தித்தேன். சில விவசாயிகளுக்கு முன் கூட்டியே தகவல் கொடுத்தும், சிலருக்கு தகவல் கொடுக்காமலும் சந்தித்தேன்.

இந்த நடைப்பயணத்திற்க்கு மூலகாரணமாய் இருந்தது, இந்தியாவில் பேராசிரியர் அனில்குப்தா ஏற்பாடு செய்த சோதையாத்திரை என்ற நடைப்பயணம் ஆகும். இதில் கலந்துகொண்டு உள்ளூர் மக்களின் பாரம்பரிய அறிவு மற்றும் கண்டுபிடிப்புகளைத் தெரிந்துக் கொள்ளவும், பிற கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பாக அமைந்தது. இதன் மூலம் எனது ஆராய்ச்சித் திட்டங்களையும் வறுமையில் வாடும் மக்களுக்குப் ஏற்றவாறு மாற்றி அமைத்துக் கொண்டேன்.

நான் நான்கு வாரங்களில் சுமார் 1,000 கிலோ மீட்டர் நடந்தே சென்று 23 விவசாயிகளை சந்தித்தேன். பண்ணைகளில் பார்த்த விவசாயிகள் மண் வளத்தையும் சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதில் மும்முரமாக இருந்தனர். விவசாயிகளுக்கு நிலத்தில் காய்கறிகள் போன்றவற்றை சாகுபடி செய்தல், கால்நடை செல்வங்களை பராமரித்தல், சந்தைக்குப் பொருள்களை எடுத்துச் செல்லுதல் போன்றவைகளை அன்றாடம் அதாவது வாரத்தில் 24/7 என்று சொன்னால் மிகையாகாது.

நான் நடந்து சென்ற களைப்பு, கால்களில் மூட்டுவலி தசைப்பிடிப்பு ஏற்பட்டதால் சோர்வு உண்டாயிற்று. ஆனால் விவசாயிகளின் அன்றாட பணிகளின் அவர்கள் படும் சோர்வை எண்ணிப்பார்க்கும் பொழுது எனக்கு ஏற்பட்ட சோர்வு மிக சொற்பமே. இவர்கள் உருவாக்கிய வேளாண்மைக் கருவிகள் மற்றும் ஜீன்பெயின் முறையில் கம்போஸ்ட் மக்கும் சமயம் உண்டாகும் வெப்பத்தை நீர் செல்லும் குழாய்கள் மூலமாக வீட்டிற்கு பயன்படுத்துதல் போன்றவற்றைப் பார்க்க முடிந்தது.

ஜீன்பெயின் முறையில் கம்போஸ்ட் தயாரிக்கும் குவியலில் உஷ்ணம் அதிகமாக இருக்கும். இந்த வெப்பத்தை பாலிதீன் பைப் மூலம் (கம்போஸ்ட் குவியலுக்குள் நீர் செல்லும் பைப் கொடுக்கப்பட்டிருக்கும்) சூடான நீரை பிற வேலைகளுக்குப் பயன்படுத்தும் முறையாகும். 50 டன் மரத்தூள் குவியல் மூலம் ஒரு நிமிடத்திற்கு 4 லிட்டர் சுடுநீர் கிடைக்கும். இது சுமார் 60 சென்டிகிரேட் வெப்பநிலையில் இருக்கும். இதனை குடிநீராகப் பயன்படுத்தலாம்.

இதுபோன்ற சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் தொழில் நுட்பங்களை வேளாண்மை வர்த்தக மையங்களுக்குத் தெரிவதில்லை.

இந்த அனுபவங்கள் நான் செல்லும் ஆப்பிரிக்கா நாட்டிற்கும் உதவியாக இருக்கும். பிரான்ஸ் நாட்டு விவசாயிகளுக்கும் உதவியாக இருக்கும் குறிப்பாக பெர்மா கல்சர் நகர்புற குறும்பண்ணை தோட்டக்காரர்களுக்கும் மற்றும் மாற்றுத் திறனாளிகள் வேலை பார்க்கும் தோட்டங்களுக்கும் பேருதவியாக இருக்கும். பிரான்ஸ் தேசத்தில்

தொழில் பார்ப்பவர்களில் தற்கொலை விகிதத்தில் விவசாயிகள் இரண்டாம் இடத்தில் உள்ளனர். இரண்டு நாட்களுக்கு ஒரு விவசாயி தற்கொலை செய்கிறார். கடந்த 10 ஆண்டுகளில் பிரான்ஸில் உள்ள 3,81,000 பண்ணைகளில் ஒரு லட்சம் பண்ணைகள் மறைந்து விட்டன.

Serge Rohmer (France), serge.rohmer@utt.fr

கடல்நீரை குடிநீராக மாற்றும் புதிய முறை

கன்னியாகுமரி மாவட்டம்,காரங்காடு கிராமத்தில் திரு மரியபால் கட்டிட தச்சு வேலை செய்து வருகிறார். இவர் பல கண்டுபிடிப்புகளை உருவாக்கி காப்புரிமை பெற்றுள்ளார். இவரது கடல்நீரை குடிநீராக மாற்றும் முறைக்கு கண்டுபிடிப்பிற்கு காப்புரிமை கிடைத்துள்ளது. இவர் கூறும் முறை பின்வருமாறு:

என்னால் செய்து பார்க்க முடியாத என்னுடைய சில கருத்துகளை பொது நலன் கருதி உரியவர்களுக்கு தெரிவிப்பது வழக்கம். அதில் முக்கியமான ஒன்று கடலுக்குள்ளே இருந்து நல்ல தண்ணீரை பம்பு செய்து எடுப்பதாகும். கடல் தண்ணீரில் இருந்து உப்பு நீக்கி நல்ல தண்ணீர் எடுக்கும் தற்போதைய முறையை விட எனது புதிய கண்டுப்பிடிப்பு மூன்றில் ஒரு பாகம் செலவு குறைவாக இருக்கும் என்பதாகும். இது எந்த அளவிற்கு சரியானது என்பது அறிவியலாளர்கள் தீர்மானித்து நடைமுறைப்படுத்தலாம்.

தற்போதைய முறையில் கடற்கரையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திலிருந்து கடல் தண்ணீர் குழாய் மூலம் உப்பு நீக்க நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள தொட்டிகளில் நீரப்பப்பட்டு முதல் நிலை சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. பின்னர் தேவையான அழுத்தத்துடன் ரிவர்ஸ் ஆஸ்மோசிஸ் கார்ட்ரிட்ஜ்க்கும் செலுத்தப்படுகிறது. அதில் சவ்வு (membrane)வழியாக ஊடுருவிய சுமார் 10 சதவீதம் முதல் 20 சதவீதம் நல்ல தண்ணீர் பெறப்படுகிறது. மீதமுள்ள 80 சதவீதம் அடர் உப்பு நீர் திருப்பி கடலுக்குள் விடப்படுகிறது. 80 சதவீதம் திருப்பி கடலுக்குள் விடப்படும். முன்னர் அதிலுள்ள சக்தி சுமார் 50 சதவீதம் அளவிற்கு பொறிமுறைகள் மூலம் (Pelton wheel, Reverse turning turbine, Piston-type work exchanger) மீட்டுக்கு செய்யப்படுகிறது.



ரிவர்ஸ் ஆஸ்மோசிஸின் அழுத்தத்திற்காக செலவிட்ட சக்தியில் 20 சதவீதம் நல்ல தண்ணீர் மற்றும் மீட்டுரு செய்து எடுக்கப்பட்ட சக்தி 42 சதவீதம் சேர்த்து 60 சதவீதம் மட்டுமே பயன் பெற முடிகிறது. சக்தி இழப்பு 45 சதவீதம் ஆகும்.

எனது கருத்தில் புதிய முறை:

கடல் நீரில் இருந்து உப்பு நீக்குவதற்கான ரிவர்ஸ் ஆஸ்மோசிஸிற்கு கொடுக்க வேண்டிய தேவையான அழுத்தம் 50 முதல் 60 பார் ஆகும். இந்த அழுத்தம் கடலுக்கு உள்ளே 500 முதல் 600 மீட்டர் ஆழத்தில் காணப்படுகிறது. அந்த ஆழத்தில் ரிவர்ஸ் ஆஸ்மோசிஸிற்கான பகுதி ஊடுருவக்கூடிய சவ்வு (membrane) குழாய்களை பொருத்தி அதனுள்ளே ஊடுருவும் நல்ல நீரை மட்டும் சேகரித்து பம்பு செய்து எடுத்துக்கொண்டிருக்கலாம். இதில் சக்தி இழப்பு ஓர் இடத்திலும் ஏற்படாது என்பதாகும்.

செய்முறை:



காற்றுப்புகாத கன செவ்வக வடிவிலான பெட்டியின் மேல் பகுதியில் வரிசையாக குழாய்கள் குறிப்பிட்ட இடைவெளியில் பெட்டியுடன் பொருத்தப் பட்டுள்ளன. குழாய்களின் மேல் பகுதி அடைக்கப்பட்டுள்ளன. அந்த குழாய்களின் இடையே சவ்வு (semi permeable membrane tubes) குழாய்களுக்குள் ஊடுருவி பெட்டிக்குள் வரும் நல்ல தண்ணீரை வெளிக்கோணர்வதற்கு பெட்டியினுள் ஒரு பம்பும் அதனுடன் வெளிக்கொணர் குழாயும் பொருத்தப்பட்டுள்ளது. பெட்டியுடன் மற்றொரு வெற்றுக் குழாயும் இணைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் சேர்ந்து ஒரு செட் எனலாம்.



சாதரண ஒரு சவ்வு குழாயினுள் ஒரு மணி நேரத்தில் 1200 லிட்டர் நல்ல தண்ணீர் ஊடுருவும் என கூறப்படுகிறது (FilmTec™ Reverse Osmosis Membranes Technical Manual: SW30XLE-1,200 L/h). ஒரு செட்டில் நூறு சவ்வு குழாய்கள் என்றால் அந்த பெட்டிக்குள் ஒரு மணி நேரத்திற்கு 1,20,000 லிட்டர் என்று அளவில் நல்ல தண்ணீர் ஊடுருவி வந்துகொண்டே இருக்கும். அதனை தொடர்ந்து பம்பு செய்து எடுத்துக்கொண்டிருக்கலாம். மரிய பவுல், 3/63, காரங்காடு, குமரி மாவட்டம் – 629809. செல் : 9487088501

காரட், உருளைக்கிழங்கு சுத்தம் செய்யும் கருவி

கொடைக்கானலுக்கருகே அட்டுவாடப்பட்டியில் திரு. சரவணன் (வயது 46) 10வது வரை படித்துவிட்டு விவசாயம் செய்து வருகிறார். தனது சொந்த நிலம் 10 ஏக்கரில் காரட், உருளைக்கிழங்கு, பீட்ரூட் பயிர்செய்து வருகிறார். விளைந்த கிழங்குகளை மண் நீக்கி சுத்தம் செய்ய கூலி ஆட்கள் வைத்து செய்துவர வேண்டும். கூலி ஆட்களுக்கு மாற்றாக கிழங்கிலுள்ள மண்ணை சுத்தம் செய்யும் கருவி வடிவவைத்துள்ளார்.

இக்கருவி ஏற்கனவே வெளியில் கிடைக்கிறது. ஆனால் அதிலுள்ள டிரம்மில் துளைகள் இல்லாமல் அசுத்தமான நீரை எளிதில் வெளியேற்ற முடியாது. எனவே இவரே முதலில் டீசல் இன்ஜினை ஒரு டிரம்மை வடிவமைத்து அச்சில் சுழலுமாறு செய்து கையால் இயக்கிவந்தார்.

டிரம்மில் நீர் நிரப்பி காரட்டு, உருளைக்கிழங்கு இட்டு சுற்ற வேண்டும். பின்னர் டீசல் இன்ஜின் மூலம் வடிவமைத்து கழுவி வந்தார். டிரம்மில் நீர் விழும் பைப் இணைத்து விட்டால் இது நிமிடத்திற்கு 28 சுற்றுகள் சுற்றும். பின்னர் மின்சார மோட்டார் 40 எச்.பி. இணைத்து நிமிடத்திற்கு 36 சுற்றுகள் சுற்றுமாறு செய்துள்ளார். மின்சாரம் கிடைக்காத நேரத்தில் டீசல் மோட்டார் பயன்படுத்துகிறார். தண்ணீர் வரும் பைப்பில் சிறு துளைகளை இட்டு நீர் நிரப்பி அழுத்தமாக பீச்சியடிக்குமாறு உள்ளது. இதை வடிவமைக்க ரூ. 1,40,000 செலவாகி உள்ளது. இந்த அமைப்பைப் பார்த்து 2 விவசாயிகள் தங்கள் தோட்டத்தில் வடிவமைத்து பயன்படுத்தி வருகின்றனர்.

30 சாக்கு காரட், உருளைக்கிழங்கை ஒரு தடவைக்கு டிரம்மில் விட்டு சுத்தம்செய்யலாம். சுத்தம் செய்யப்பட்ட நல்ல மினுமினுப்புடன் காணப்படும் ஆனால் 5 நாட்கள் மட்டுமே சேகரித்து வைக்கலாம். சாதாரணமாக கையால் சுத்தம் செய்தால் 15 நாட்கள் வரை சேமித்து வைக்க முடியும்.

ஈஸ்வரன், 461/1, பாரதிநகர், அட்டுவாம்பட்டி அஞ்சல், கொடைக்கானல்–624 101. செல் : 9245377848

தொகுப்பு : ஜெ.ஸ்நேகா, எஸ்.சௌந்தர்யா

காருண்யா தொழில்நுட்பக்கல்லூரி

காளைமாடு கொண்டு இயக்கப்படும் பல்நோக்கு கருவி

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் திரு. சசிக்குமார் (வயது 40) பி.இ., இன்ஜினியரிங் படித்து பின் சில வருடங்கள் விவசாயிகளுக்கு உதவும் சேவையில் ஈடுபட ஆர்வம் கொண்டார். மாடுகளுக்கு வேலைப்பளுவைக் குறைத்து எளிதாக இயங்கும் 'அக்னிகார்ட்' என்ற வண்டியை உருவாக்கினார். இதில் இரும்பு சக்கரம் 2 உள்ளன. இதில் கலப்பை கொழு, டிரெய்லர், விதைப்பான் இவைகளை சேர்க்கலாம். கழற்றிக் கொள்ளலாம். இந்த அமைப்பை 2017ல் செய்து முடித்தார். பின்னர் பூட்டப்படும் மாடுகளின் உயரம், எடை இதற்கேற்றார்போல் உழும் சமயம் கற்கள் மாட்டிக் கொண்டால் கொழு உடையுமாறும் செய்திருக்கிறார். இதனால் மாடுகளுக்கு எந்த பாதிப்பும் வராதபடி வடிவவைத்துள்ளார்.

இந்த பல்நோக்கு கருவியின் எடை 300 கிலோ இந்த கருவியும் இத்துடன் 6 இணைப்புகளும் சேர்ந்து ரூ. 45,000/–க்கு கொடுத்து வருகிறார்.

இதுவரை 200 கருவிகளை விவசாயிகளுக்கு கொடுத்துள்ளார். இந்த கருவியின் வேலைத்திறன் மாடுகளின் உயரம், எடையைப் பொறுத்து 15 – 20 எச்.பி. ஆகும். இந்த கருவி மூலம் ஓர் ஏக்கர் நிலத்தை 1 1/2 மணி நேரத்தில் உழ முடியும். ஒரு ஏக்கர் உழும் சமயம் மாடுகள் நடக்கும் தூரம் 10 கி.மீ. மட்டுமே சாதாரண உழவில் 25 கி.மீ. தூரம் மாடுகள் நடக்க வேண்டும்.

சசிக்குமார், அக்னிகார்ட், 2/ஏ2, நந்தி நகர், கண்ணப்ப நகர், இரத்தினபுரி அஞ்சல், கோயம்புத்தூர்–641 027. செல் : 99166 51433

தொகுப்பு : டோனிட்டா, ரோசினி

4வது ஆண்டு வேளாண்மைப்படிப்பு

காருண்யா தொழில்நுட்பக்கல்லூரி

பிலிப்பைன்ஸ் நாட்டில் நடந்த கண்காட்சியும் கண்டுபிடிப்புகளும்

பிலிப்பைன்ஸ் நாட்டில் அடித்தள கண்டுபிடிப்புகள் மற்றும் சுற்றும் பொருளாதாரம் (Circular Economy) பற்றிய கண்காட்சி 21 ஜூலை 2023 ல் நடைபெற்றது. இதில் காணப்பட்ட கண்டுபிடிப்புகள் பற்றிய விவரம்.

விதைப்பான் மற்றும் உரமிடும் கருவி

டெல்பின் கியூவாஸ் என்ற பிலிப்பைன்ஸ் நாட்டைச் சார்ந்த வெளிநாட்டு தொழிலாளி. இவர் சொந்த நாடான பிலிப்பைன்ஸை விட்டு கென்யா, கனடா போன்ற நாடுகளில் 33 ஆண்டுகள் இருந்து விட்டு 2021 ல் சொந்த ஊருக்கு திரும்பியவர் தனது அன்னைக்கு 98 வயதானதால் கூட இருந்து கவனிக்க வந்து விட்டார். இச்சமயத்தில் விவசாயிகளுக்கு உதவியாக விதை மற்றும் உரமிடும் கருவியை உருவாக்கினார். ஆறுவரிசை விதை அல்லது உரமிடும் கருவி மூலம் குறைந்த செலவில் விதை உரமிடலாம். இடுபொருட்கள் நிலத்தில் இட்டவுடன் மண்கொண்டு மூடிவிட ஒரு மண் மூடும் அமைப்பும் பொருத்தப்பட்டுள்ளது. இதனை பலடக் என்று பெயரிட்டுள்ளார். இதனை கையாலும் இயக்கலாம், டிராக்டரிலும் பொருத்தி பயன்படுத்தலாம். விதைக்கும் இடைவெளி, விதை அளவு உரமிடுதல் இவைகளை கூட்டி குறைக்க வசதி உண்டு.

கையால் இயக்கினால் ஒரு நாளைக்கு 2 ஏக்கரும் டிராக்டரில் இணைத்தால் 5–5 1/2 ஏக்கர் நிலத்தில் விரித்தது உரமிடலாம்.

இவர் எலக்ட்ரிக்கல் இன்ஜினியர் முடித்துவிட்டு 25 வயதில் கென்யாவில் பைப்மில்லில் வேலைக்கு சேர்ந்தார். பின்னர் சூரியஒளி ஆற்றல் கம்பெனியில் வேலை செய்து விட்டு 30 வது வயதில் கனடாவிற்கு சென்றார். பின்னர் தொழிற்சாலை மின்சார இன்ஜினியர் சான்றிதழ் வகுப்பில் தேர்ச்சி பெற்று நல்ல வேலையில் சேர்ந்தார். சிறு வயதில் தனது தாயார் கஷ்டப்பட்டு தோட்ட வேலையைச் செய்துவந்ததை நினைத்து இதற்குத் தீர்வாக கருவி மூலம் வேளாண்மையை கடைப்பிடிக்க நினைத்தார். 2018 ல் இதற்கான முயற்சியை எடுத்து ஒரு கருவியை உருவாக்கினார். பின்னர் இதன் எடை 38 கிலோவிலிருந்து 20 ஆகக் குறைக்க பல முறை மாற்றி அமைத்தார். முதலில் இது நெல்வயலுக்கு மட்டும் தான் பயன்படுத்த முடிந்தது. பின்னர் மக்காச்சோளம், பீன்ஸ், சோளம் போன்றவற்றையும் விதைக்க முயற்சித்து வெற்றி கண்டார். இது எடைகுறைவான (3D printed flaments) மூலம் உருவாக்கி 25 கிலோவாக எடை உள்ளது. இவர் 2021ல் பிலிப்பைன்ஸ் வந்ததும் இந்தக்கருவியை விவசாயிகள் உற்றுப்பார்த்து நடைமுறைக்கு ஏற்றதல்ல என கூறிவிட்டனர். பின்னர் விவசாயிகளின் யோசனைகள் மூலம் விதை விழும் சமயம் மண்ணைக் கிளறவும், விழுந்தபின் மூடவும் கருவியை வடிவமைத்தார். பின்னர் ஸ்டார்ட் ஆப் மூலம் கருவியை பயன்பாட்டிற்கு கொண்டு வந்து விவசாயிகளுக்கு விநியோகிக்க உள்ளார்.



பிளாஷ்டிக் மறுசுழற்சி

பிலிப்பைன்ஸ் நாட்டில் பியா ஒகாம்போ என்ற பெண்மணி தனது நண்பர்களுடன் சேர்ந்து சுத்த சமுத்திரம் (pure Ocean) என்ற அமைப்பை ஏற்படுத்தி கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாத்து பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்து மறு சுழற்சி செய்து வருகிறார். இவருடைய கம்பெனி மூலம் கோவிட் காலத்தில் அவரவர் வீட்டு கழிவுகளைப் பயன்படுத்தி

தொழில் முனைவோராக்க வழிகாட்டியது. உள்ளூர் தன்னார்வலர்களுடன் கடற்கரை, தீவுகளில் அடித்து வரப்படும் கழிவுப்பொருட்களை சேகரித்து மறு சுழற்சி செய்ய ஆயத்தம் செய்தார்.

ஒவ்வொரு தீவுக்கு உழுந்த மறு சுழற்சி முறைகளை கையாண்டு முறைப்படுத்தினார். சிறு குழந்தைகளுக்கு மூத்திரம், மலம் உறிஞ்சும் பிளாஸ்டிக் கவர்தான் (plastic Diapers) அதிகளவில் கழிவுப் பொருட்களாக உள்ளன. இவர் பிளாஸ்டிக்கிற்கு பதில் பருத்தி துணியில் இதைத்தயாரிக்கும் முறையை தாய்மார்கள் பயன்படுத்த ஊக்குவித்தார். இதை உள்ளூர் பெண்களே தயாரித்து வருமானமும் ஈட்டினர். குழந்தைகளுக்கும் இதை அணிவிப்பது எந்த தொந்திரவுவில்லாமல் குழந்தைகளும் ஏற்றுக்கொள்வது சிறப்பம்சமாகும். இதனை நாடெங்கிலும் கொள்கை ரீதியாக முடி வெடுத்து செயல்படுத்தப்படுகிறது. கடலில் சேகரிக்கப்படும் செருப்பு, சூ, பிளாஸ்டிக் ரூட்கேஸ் போன்றவற்றை கட்டுமான பொருட்களாக சுழற்சி செய்தல், பிளாஸ்டிக் கயிறாக மாற்றுதல் போன்றவற்றை பிற கம்பெனியுடன் சேர்ந்து வெற்றி பெற்றுள்ளார்.

இந்த பிளாஸ்டிக் மறு சுழற்சி முயற்சியை 2009ல் துவங்கி 2016ல் இதனை 1000 முனிசிபர்லிட்டுகளுக்கு நடைமுறைபடுத்தி உள்ளார். இருவர் தற்சமயம் எம்.எஸ்.சி ஆன்தரலோலாஜி படித்து வருகிறார்.

தேனீ ஜூலை–செப்டம்பர் 2023

ஆசாரி வேலைக்கு நிற்கும் சட்டம்

காஷ்மீரில் ஆனந்த்நகர் ஜில்லாவில் நிசர் அஹமத் இட்டு என்பவர் டெலஸ்கோப்முறையில் இரும்பு ஏணி வடிவமைத்துள்ளார். இதில் 5–14 அடி வரை உயரமான இடத்தில் நின்று கொண்டு வேலை பார்க்கலாம். இது மரப்பலகை கொண்டு கட்டப்படும் உயரமான பிளாட்பார்மை விட பாதுகாப்பாக வேலை செய்யலாம். இதன் உயரத்தை கூட்டி, குறைத்து கொள்ளலாம். இவர் 6வது வரைதான் படித்துள்ளார். இவர் தச்சுவேலை செய்து குடும்பம் நடத்தி வருகிறார். இதனை நித்தமும் ரூ. 200 க்கு வாடகைக்குத் தருகிறார்.

Nisar Ahmad Itoo
Anantnag, Jammu and Kashmir

பிற மாநில உத்திகள்

பயிர் விளைச்சலைக் கூட்ட வில்வப்பழச்சாறு

குஜராத் மாநிலத்தில் இராஜ்கோட் மாவட்டம், போயாரா கிராமத்தில் திரு. சுரேஷ்பாய் இயற்கை விவசாயம் செய்து வருகிறார். இவர் பழுத்த வில்வப்பழம் 10 கிலோ எடுத்து 30 லிட்டர் நீரில் பிசைந்து விடுகிறார். இத்துடன் 3 கிலோ வெல்லம் சேர்க்கப்படுகிறது. இதனை 3 மாதங்கள் புளிக்கவிட்டு இதிலிருந்து வடிகட்டிய கரைசல் 100 மி.லி. எடுத்து 15 லிட்டர் நீரில் கலந்து தக்காளி, நிலக்கடலை நட்ட 1 1/2 மாதத்திற்கு பின் தெளிக்கிறார். இதனால் நன்றாகப் பூ எடுத்து மகசூல் கூடுவதாகக் கூறுகிறார்.

இது தவிர 10 வகையான கசப்பு, துவர்ப்பு குணம் கொண்ட தாவரங்களான ஊமத்தை, எருக்கம், இலந்தை, முருங்கை, கருவேலம் வேம்பு, ஆடாதொடை போன்றவற்றை 10 கிலோ அளவு எடுத்து நறுக்கி சுமார் 30 லிட்டர் நீரில் கொதிக்க விட்டு ஆற வைத்து ஒரு வாரம் புளிக்க விடுகிறார். பின்னர் வடிகட்டிய கரைசலை 300 மில்லி எடுத்து 15 லிட்டர் நீரில் கலந்து நிலக்கடலை, தக்காளிப்பயிருக்கு நட்ட ஒரு மாதம் கழித்து 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கிறார். இந்தக் கரைசலுடன் ஜீவாமிருதம், புளித்த மோர் சமஅளவு (100:100:100 மி.லி) சேர்த்து பயிருக்குத் தெளிக்க பயிர் வளர்ச்சி கூடுவதாகக் கூறுகிறார்.

நன்றி : தேனீ 34201 ஏப்ரல்–ஜூன் 2023

மாமரங்களில் பழ ஈக்களை தடுக்க

இராஜீவ்பாய் காய்கறிகள் மற்றும் தானியங்களை பயிரிடுவதைத் தவிர, மாந்தோப்பையும் பராமரித்து வருகிறார்.

பழ ஈக்கள் மா மரங்களை தாக்கும் போது அவர் ஒரு லிட்டர் மாட்டு சிறுநீர் 1.5 லிட்டர் பத்திலைக் கரைசல் 50 கிராம் பெருங்காயம், பச்சை மிளகாய் 50 கிராம், பூண்டு ஆகியவற்றை 15 லிட்டர் தண்ணீரில் பாதியாகும் வரை கொதிக்க வைத்து ஆற வைத்து 300 மி.லி. கரைசலை 15 லிட்டர் நீரில் கலந்து பம்ப் மூலம் வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை தெளித்தால் பழ ஈக்களை கட்டுப்படுத்தலாம்.

நன்றி : தேனீ: 34202– ஏப்ரல்–ஜூன் 2023

கால்நடைகளின் இரைப்பை குடல் பிரச்சனைக்கு

காந்திபாய் ஜீவாமிர்தம், வேப்பஎண்ணெய், வேப்ப இலை மற்றும் சீத்தாப்பழ இலைகளை ஒரு கரைசலாக கொதிக்க வைக்கிறார். அவர் தனது பயிர்களுக்கு ஊட்டமளிக்கவும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும் இந்த கரைசல் தெளிப்பு உதவுகிறது. அவர் கால்நடைகளுக்கு இரண்டு அல்லது மூன்று ஜாதிக்காயை ரொட்டியுடன் சேர்த்து 2 நாட்களுக்குள் வயிற்றுப்போக்கை குணப் படுத்துகிறார். நன்றி : தேனீ 34203– ஏப்ரல்–ஜூன் 23

நோவாவின் கால்நடை மூலிகை வைத்தியம்

திமிரி காய்ச்சலுக்கு

செறுமல், வாயில் நுரையுடன் கூடிய வாய் நீர் வடியும். அதிகப்படியான மஞ்சள் நிற கோமியம் வரும். வறண்ட சாணம் தள்ளும். முன்னங்கால் சந்து தானாக ஆட்டம் கொடுக்கும். கீழே விழும் தருவாயில் இருக்கும். இதுவே இந்த நோயின் அறிகுறியாகும். இந்த நோய்க்கு கஸ்தூரி மஞ்சள் 50 கிராம், திப்பிலி 50 கிராம், நறுக்கு மூளம் 50 கிராம், கூர்வெல் அரிசி 50 கிராம், ஓமம் 50 கிராம், வால் மிளகு 50 கிராம், பெருங்காயம் 50 கிராம், வெற்றிலை 5 ரூபாய்க்கு கொல்லங்கிழங்கு, குப்பைமேனி ஒரு கைப்பிடி, கடலை அவரை (ஈசவிதைக்காய்) ஒரு கைப்பிடி இலைகள் அனைத்தும் சேர்த்து இடித்து பின்பு வேப்ப எண்ணெய் 100 மில்லியை சேர்த்து உருண்டையாக வைத்துக் கொள்ளவும். பின்பு இதமான சுடு தண்ணீரில் கலக்கி ஒரு வேலை கொடுத்த ஒரு மணிநேரத்தில் மாடு தன்னுடைய சுயநிலைக்கு வந்துவிடும்.

இதற்கு பத்தியம் – வைக்கோல் அல்லது கேப்பை கூல் அல்லது பச்சரிசி கஞ்சி மட்டும் கொடுக்க வேண்டும். இந்த பத்தியம் ஒரு வாரத்திற்கு மட்டுமே.

கழுத்துப் பிடிப்பு சந்து பிடிப்புக்கு

கால் நொண்டும், குனிந்து உணவு எடுக்காது. உடம்பு புல்லரித்து காணப்படும். இதுவே இந்த நோயின் அறிகுறியாகும். இதற்கு மாட்டை கீழே சாய்த்து கால்கள் ஒவ்வொன்றையும் முன் பின்னாக வேகமாக அசைத்து இழுத்துவிட வேண்டும். தலையையும் கொம்பையும் பிடித்து தூக்கிக் கொண்டு இருபுறமும் சிலுப்பி விட வேண்டும். இதற்கு பிறகு, குப்பைமேனி 1 கைபிடி, கோடாசாலை அல்லது வெடிமுத்து செடி இலை 1 கைப்பிடி, கார்வேல் அரிசி 50 கிராம், கருஞ்சீரகம் 50 கிராம், சுக்கு 50 கிராம், வெள்ளைப்பூண்டு 50 கிராம், வேப்பம்பட்டை 25 கிராம், ஓமம் 50 கிராம், கசகசா அரிசி 50 கிராம், நறுக்கு மூலம் 2 ரூபாய்க்கு, கருங்கொடு கிலி வேர் 2 ரூபாய்க்கு இவை அனைத்தும் 500 மில்லி தேங்காய் எண்ணெயில் காய்ச்சி ஆற வைத்த பாதியை உள் மருந்தாகக் கொடுக்கவும். மீதிப்பாதியை வலிகாட்டும் இடத்தில் நன்றாகத் தேய்த்து விட வேண்டும். பின்பு 2 – 3 தினங்களில் மாட்டை வேலையில் சேர்க்கலாம்.

தா. நோவா, குப்பண்ணாபுரம், மானூர் அஞ்சல்

திருநெல்வேலி மாவட்டம்

ஜெயகிருஷ்ணனின் வேளாண்மைக் கருவிகள்

கரும்பில் கங்கு எடுத்து மண்அணைக்கும் கருவி

மினிடிராக்டரில் இந்த கருவியை இணைத்து வேலை செய்யலாம். இந்த கருவியைப் பயன்படுத்த கரும்பில் 6 அடி இடைவேளையில் நடவு செய்ய வேண்டும். இது வரை 500 கருவிகளுக்கு மேல் வினியோகம் செய்துள்ளார். இந்த கருவியை முதன் முதலில் தயார் செய்வதற்கு தேசிய கண்டுபிடித்த அறக்கட்டளையில் பரிசு பெற்றுள்ளார். இந்த கருவி ரூ. 22,000 க்கு தயார் செய்து கொடுத்து வருகிறார். தற்பொழுது இந்த கருவியை பல நிறுவனங்கள் காபி அடித்து தயார் செய்து வருகின்றனர். மஞ்சள் அறுவடை செய்யும் மிஷன் ரூ. 50,000 க்கு கொடுக்கிறார்.

மண் அணைக்கும் கருவி

இதனை மினிடிராக்டரில் பயன்படுத்தலாம். இது மண்அணைக்கும் பாத்திப் போடுவதற்கு வாழை, கரும்பு போன்ற பயிர்களுக்கு பயன்படுத்தலாம். இதன் விலை ரூ. 22,000 க்கு செய்து கொடுக்கிறார்.

பாலித்தீன் சீட் மூடாக்கு போடும் கருவி

இந்த கருவியை கடந்த 8 வருடங்களாக வடிவமைத்து பயன்படுத்தி வருகிறார். இந்த முறையை சிலர் வேலை ஆட்கள் மூலம் செய்து வந்தனர். இதை கருவியாக வடிவமைத்து இயங்குவதற்கு இவரே முன் உதாரணம். இதனை வாழை, திசு கன்று, மிளகாய், தக்காளி போன்ற பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். இந்த முறையைக் கடைப்பிடிப்பதால் களைச் செடிகள் வளராது. மண்ணிலிருந்து நீர் ஆவி ஆகுதல் குறையும். இந்த கருவியை கர்நாடாகா சாம்ராஜ் நகர் பகுதியில் பல விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். இதன் விலை ரூ. 50,000

பிர். ஆர் ஜெயகிருஷ்ணன், எரன்காட்டுதோட்டம், கெட்டிசமுத்திரம் கிராமம். அந்தியூர் வழி, ஈரோடு மாவட்டம். செல் : 9486314020

கள்ளிப்பால் கொண்டு கரையானை கட்டுப்படுத்துதல்

வடகுஜராத்தில் விவசாய நிலங்களில் கரையான் தாக்குதல் காணப்படுகிறது. மேஷானா மாவட்டத்தில் ரமேஷ்பாய் பால் வரும் செடிகளான எருக்கு, திருகுக்கள்ளி இவைகளை சுமார் 7–8 கிலோ எடுத்து நறுக்கி 200 கிட்டர் நீரில் ஒரு வாரம் புளிக்கவிடுகிறார். இதனை வடிகட்டி நீர்ப்பாசன நீருடன் ஒரு ஏக்கரில் கலந்து விடுகிறார். இதனால் கரையான் தாக்குதல் குறைகிறது.

நன்றி : தேனீ ஏப்ரல் ஜீன் 2023– 34211

அஸ்வினி மற்றும் இலைப்பேனைக் கட்டுப்படுத்துதல்

பவநகர் மாவட்டத்தில் ஜெயந்த்பாய் இயற்கை முறையில் காய்கறி சாகுபடி செய்கிறார். இவர் வேப்பங்காய், எருக்கு இலை தலா 2 கிலோ எடுத்து அரைத்து இத்துடன் சுமார் 4 லிட்டர் பத்திலைக் கரைசல் 10 லிட்டர் சேர்த்து இதனை ஒரு ட்ரம்மில் ஊத்துகிறார். இதில் 160 லிட்டர் தண்ணீர் மற்றும் மாட்டு கோமியம் 20 லிட்டர் சேர்த்து விடுகிறார். இதனை ஒரு நாளுக்கு இரு முறை கலக்கி வர வேண்டும். இது ஐந்து நாட்களில் புளித்து விடும். பின்னர் இதனை வருடம் முழுவதும் பயன்படுத்தலாம். இந்த கரைசலை ஒரு லிட்டர் எடுத்து 15 லிட்டர் நீரில் கலந்து பயிருக்கு தெளிக்க அஸ்வினி மற்றும் இலைப்பேன்கள் கட்டுப்படும்.

நன்றி : தேனீ ஏப்ரல் – ஜீன் 2023 – 34214

மாந்தோப்பு வளம் பெற

அதிகளவு பூச்சிக் கொல்லியினைப் பயன்படுத்தியதால் நலிவடைந்து வந்த தனது மா தோட்டத்தை புத்துயிர் பெற மோர் மற்றும் மாட்டு கோமியத்தை பயன்படுத்தி தரன்பாய் பெரும் வெற்றி பெற்றார். அவர் 60 லிட்டர் புளித்த மோர் மற்றும் 25 லிட்டர் மாட்டு கோமியம் இவற்றை ஒரு தண்ணீர் தொட்டியில் 100 லிட்டர் தண்ணீருடன் கலந்து சில நாட்கள் வைத்திருக்கிறார். அவர் தனது டிராக்டரில் இருந்து இந்த கரைசலை பழத்தோட்டம் முழுவதும் தெளிக்கிறார். பின்னர் சிறிய ஸ்ப்ரே பம்பிலிருந்து மீதி கரைசலை கொஞ்சம் கொஞ்சமாக மொத்த தோட்டத்திற்கும் தெளிக்கிறார். இந்த கரைசலை பூக்கும் பருவத்திற்கு 15 நாட்களுக்கு முன்பு தெளிக்கிறார். இவர் ஆரோக்கியமான மண்ணுக்கு ஜீவாமிருதத்தையும் பயன்படுத்துகிறார்.

ஜீவாமிருதம் தயாரிக்க

மாட்டுச்சாணம் 15 கிலோ, கோமியம் 15 லிட்டர் வெல்லம் 2 கிலோ, பயறு வகை 2 கிலோ (ஊற வைத்து அரைத்து) பின்னர் ஒரு கைப்பிடி அளவு மண் நிலத்திலிருந்து எடுத்து போடவும். இதனை நன்கு கலந்து விட வேண்டும். இப்படியாக 7 நாட்கள் கலக்கவும். இந்தக் கரைசலை 10 லிட்டர் நீருக்கு 300 மி.லி. என்ற அளவில் கலந்து நிலத்திற்கு மண்ணில் ஊற்றலாம். அல்லது பாசனநீரில் கலந்து விடலாம். இது ஓர் ஏக்கருக்கு போதுமானது. இந்தக் கரைசலை ஒரு மாதம் வரை பயன்படுத்தலாம்.

நன்றி : தேனீ ஏப்ரல் ஜீன் 2023 – 34212

பட்டுப்புழு வலை மடிக்கும் இயந்திரம்

மஹாராஷ்ட்ரா மாநிலம் ஜால்னா மாவட்டத்தில் சுனில் சிண்டே (47) பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளார். விவசாயத்தில் தொழிலாளர் பற்றாக்குறையை சரிசெய்ய பல விவசாயக் கருவிகளை வடிவமைத்துள்ளார். சந்திரிகா என்ற பட்டுப்புழு கூட்டுப்புழுவாக மாற பிளாஸ்டிக் வலை நடைமுறையில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு தடவை கூட்டுப்புழு எடுத்தவுடன் அடுத்த சுழற்சி வரை பட்டுப்புழு வலை சரியாக மடித்து இறுக்கமாக கயிறுகளால் கட்டப்பட்டிருக்க வேண்டும். இல்லையெனில் வலைகள் சிதைந்து கூட்டை வளர்க்க முடியாது. ஒரு நாளைக்கு 200 வலைகளை பிணைக்க நான்கு தொழிலாளர்கள் தேவை. எனவே சுனில் பட்டுப்புழு வளர்ப்பு வலை மடிப்பு இயந்திரம் உருவாக்கியுள்ளார்.

இந்த இயந்திரம் மூன்று பகுதிகளைக் கொண்ட சதுர குழாய் அமைப்பு ஆகும். அவை பிரதான சட்டம்,

மேடை மற்றும் அழுத்தும் லிவர் ஆகும். மூன்று குழாய் தளம் வைக்கப்பட்டு அதன் மேல் ஒரு வலைகள் வைக்கப்பட்டுள்ளன. வலைகளை சரியாக வைத்தப் பிறகு மேடையானது அதன் முக்கிய சட்டத்துடன் இணைக்கப்பட்டு மேல்நோக்கி வைக்கப்பட்டுள்ளது. மேடை செங்குத்தாக மாறியவுடன் அதன் நிலையில் பூட்டப்பட்டு, அழுத்தும் லிவர் வழியாக நகர்த்தப்பட்ட கிடைமட்டக்குழாய் மூலம் வலைகள் கீழ் நோக்கி அழுத்தப்படும் லிவர் நிலையில் பூட்டப்படும்.

அழுத்துதல் மட்டும் பூட்டுதல் காரணமாக வலைகளை சுற்றி கயிறுகளை எளிதாக திருத்த முடியும். வலையை சரியாக கட்டிய பிறகு, பூட்டுகள் திறந்து வலைகள் அகற்றப்படுகின்றன. இந்த இயந்திரத்தின் எடை சுமார் 16 கிலோ ஆகும். ஒரு மணி நேரத்திற்கு 300 வலைகள் பிண்ணி மடிக்க முடியும். இந்த இயந்திரம் பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுப்பட்டுள்ள விவசாயிகளால் எளிதில் கையாள முடியும். இது நேரத்தை சேமித்து அடுத்த சுழற்சிக்கு வலையின் தரத்தை பாதுகாக்கிறது. இதன் விலை ரூ. 3,500 ஆகும்.

சுனில் அர்ஜுன் சின்டே, ஜல்னா மாவட்டம். மகாராஷ்ட்ரா. செல் : 9373238505

தேங்காய் ஏன் மனிதனுக்கு சிறந்த உணவு: ம.கி. பாண்டுரெங்கனாரின் தேங்காய் பற்றிய ஆய்வுகள்

தேங்காய் ஆண்டு முழுவதும் கிடைக்கும். வேறு உயிரினங்கள் எளிதில் உண்ண முடியாத ஆனால் மனிதன் மட்டும் உண்ணக் கூடியதாக இருக்கிறது. பறவைகள் பிற விலங்குகள் தேங்காயை உரித்து உடைத்துத் தின்ன முடியாது. குரங்குகளாலும் முற்றிய தேங்காயை உரித்து உடைக்க முடியாது. மனிதக் குரங்குகள், மனிதனால் மட்டுமே உண்ணக்கூடிய உணவாக தேங்காய் தனித்துவமாகக் இருக்கிறது.

32 பற்களுக்கும் வேலை தரும் உணவு ஏறக்குறைய 40–50 முறை மென்றால்தான் நாக்கு தேங்காயை உள்ளே அனுப்பும். செரிமானம் நடக்க உமிழ்நீர் நன்கு கலந்து உள்ளே போக வேண்டும். எனவே இது மனிதனுக்கு மட்டுமே உரிய உணவு என அறிந்தார். குழந்தை முதல் இறக்கின்ற முதியவர் வரைக்கும் எல்லாப் பருவத்திலும் பொருந்தக் கூடியதாக உள்ள உணவு எது? என ஆராய்ந்தார்.

பச்சிளம் குழந்தைகளுக்கு தாய்ப்பாலுக்குப்பின் இளநீர், பின் அதன் வழுக்கை, பல் முளைத்தவுடன் இளம் தேங்காய், பற்கள் உறுதியான பின் முற்றிய தேங்காய் பின்னர் முதியவனாகிப் பின் மீண்டும் இளம் தேங்காய், இன்னும் வயதாகி படுக்கையில் விழுந்தால் இளநீர் வழுக்கைத் தேங்காய் ஆக எந்த வயதிலும், எந்நிலையிலும் மனிதன் வேறு எதையுமே நாடாமல், மாடு எப்படி புல் ஒன்றிலேயே வாழ முடியுமோ, அதுபோல மனிதன் தேங்காய் ஒன்றிலேயே வாழ முடியும். எனவே அதுதான் மனிதனுக்குரிய உணவாக இருக்க முடியும்.

மனித உணவின் தேடல்

கேரிங்டன் தனது Vitality Fasting & Nutrition என்ற நூலில் மனித உணவு கொட்டைப் பருப்புகளும், பழங்களும் என்றார். ம.கி.பாவின் சிந்தனையில் மனிதனுக்கு ஆண்டு முழுவதும் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கக்கூடிய பழம் எது ? ஆண்டு முழுவதும் தொடர்ந்து கிடைக்கக்கூடிய ஒரே கனி வாழைக்கனி மட்டும்தான் மற்றவை எல்லாம் பருவ காலங்களில் மட்டுமே கிடைக்கும்.

அது போல கொட்டைப் பருப்புகளில் ஆண்டு முழுவதும் கிடைக்கக் கூடியது எது? முந்திரிப் பருப்பு பாதாம் பருப்பு பிஸ்தா பருப்பு? எந்த பருப்புமே ஆண்டு முழுவதும் கிடைக்காது தேங்காய் ஒன்றைத் தவிர. தேங்காய், வாழைப்பழம்தான் மனித உணவு என்ற முடிவுக்கு வந்தார். அவரின் எது மனித உணவு? என்ற நூலின் அட்டையில் வாழைப்பழம், தேங்காய் படங்கள் இருக்கும். தேங்காய் ஆய்வு தொடர்கிறது. தேங்காய் குறித்து இன்னும் நுட்பமாக ஆராய்ந்தார். தேங்காய் மரத்திலிருந்து கீழே விழுகிறது முற்றிய தேங்காய் விழுந்த பின்னும் உடைவதில்லை. அதனை சுற்றியுள்ள பலமான ஓடே அதனைக் காக்கிறது

அதாவது தேங்காய் ஒன்றுதான் தண்ணீரில் விழுந்தாலும் கெடாது. எடுத்துகாட்டாக கடற்கரை ஓரங்களில் விழும் தேங்காய், கடல் நீரிலேயே மிதந்து பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள வேறு ஒரு நாட்டின் கரையில் ஒதுங்கி முளைத்து மரமாக வளர்வதுண்டு. பல மாதங்களாக கடல்நீரில் கிடந்தாலும் பாதிக்கப்படாத ஒரே உணவு முற்றிய தேங்காய் ஒன்றுதான். தேங்காய் பூ பூத்ததிலிருந்து பிஞ்சாகி, இளநீராகி முற்றி கீழே விழுவதற்கு ஓர் ஆண்டாகிறது. தென்னைமரம் ஓர் ஆண்டு முயற்சி செய்து தேங்காயினை உருவாக்குகிறது. இவ்வாறு ஓர் ஆண்டு தயாராகின்ற உணவுப் பொருள் வேறு இல்லை. உலகஉயிர்களில் உன்னதமான உயிர் மனிதன்தான். ஆக உயிர்களிலேயே உயர்ந்தவனாகிய மனிதனுக்கு உணவுப் பொருட்களிலேயே மேலான உணவு இருக்க வேண்டும். அது எது? அது தேங்காயாகத்தான் இருக்க வேண்டும் என்றார்.

மற்றுமொரு ஆய்வு

பரிணாமத்தில் கோடிக்கணக்கான ஆண்டுகளாக இயற்கை தேர்ந்து தேர்ந்து மனிதன் எனும் உன்னதமான உயிரை உருவாக்கியது,

அதுபோல் இயற்கை தேர்ந்து தேர்ந்து எந்த ஒரு தாவரத்தை உருவாக்கி. அந்த தாவரம் உருவாக்கிய மிகச் சிறந்த உணவு எதுவாக இருக்கும்?

மனிதன் கருவிலிருந்து குழந்தையாகப் பிறக்க கிட்டத்தட்ட 270 நாட்கள் ஆகும். தேங்காய் பூவிலிருந்து நெற்றாகி விழ 300 நாட்களுக்கு மேல் ஆகும். ஆக இந்த உணவு மனிதனுக்குப் பொருந்தும். உலகத்து உணவுப் பொருட்களிலேயே மிக அதிகமாக வடிகட்டப்பட்ட உணவு, தூய்மைப்படுத்தப்பட்ட உணவு தேங்காய். உயர்ந்தமரம் தென்னை வேரிலிருந்து மரத்தண்டு வழியாக வடிகட்டி பின் பாளை பின் காம்பு வழியாகத் தேங்காயை அடைகிறது. தேங்காய்க்கு 3 கண்கள். அதில் இரண்டு கடினமானது. ஒன்று இலகுவானது அதுவும் மூடிய நிலையில் வடிகட்டிய நீர்தான் சல்வூடு பரவல் முறையில் உள் செல்லும். இந்த அளவு தூய்மைப்படுத்தப்பட்டு தயாராகின்ற உணவு வேறு உண்டா? மற்ற உயிரினங்கள் எளிதில் உண்ண முடியாததால் மனிதனுக்காகவே படைக்கப்பட்ட உணவாகத் தேங்காய் இருக்கிறது.

அடுத்த ஆய்வு

மனிதன் உண்கிற உணவில் எந்த உணவு வாயிலிருந்து மலக்குடல் வரை தங்காமல் எளிதில் போகும்? வாழைப்பழம் சாப்பிட்டபின் வாய்வழி உள்ளே சென்று குடலில் தேங்கிவிடுகிறது. ஆனால் தேங்காய் நாம் உண்டால் மறுநாள் காலையில் அந்த தேங்காய் சக்கையாக வெளியேறிவிடும். மற்ற உணவுகள் தேங்கி மெதுவாக வரும். தேங்காய் ஒன்றுதான் தங்கு தடையின்றி வெளிவரும். எனவே தேங்காய்தான் மனிதனுக்குச் சிறந்த உணவாக இருக்க முடியும். மனித உணவே தேங்காய் என்ற முடிவுக்கு வருகின்றார்.

நல்வாழ்வு மையம், சிவசைலம், அம்பாசமுத்திரம் வழி, திருநெல்வேலி மாவட்டம். செல் : 9443043074

பாரம்பரிய கெட்டிராகி கேழ்வரகு

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டாரம், பர்கூர் மலைப்பகுதியில் உள்ள லிங்காயத் சமூகத்தினர் கடந்த 5 ஆண்டுகளாக மக்காச்சோளம் அதிகளவில் பயிர் செய்வதால் கேழ்வரகு பயிர் செய்யும் நிலப்பரப்பு குறைந்து வருகிறது. லிங்காயத் சமூகத்தினர் தங்கள் வீட்டுத் தேவைக்காக மட்டும் பாரம்பரிய கேழ்வரகு இரகமான கெட்டிராகி பயிர் செய்கின்றனர். இந்தப் பயிரில் விளைந்த ராகி சுமார் ஒரு கிலோவைப் பயன்படுத்தி 4–5 நபர்கள் வரை உண்பதற்கு களி செய்யலாம். ஆனால் கம்பெனி விதை ராகியை ஒரு கிலோ எடுத்து சமைத்தால் 3

நபர்களுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும். கெட்டிராகியில் விளைந்த ராகி மூலம் களி சாப்பிட நல்ல பசி தாங்கும். பயிருக்கு நோயும், பூச்சியும் இல்லாமலிருப்பதால் இரசாயன உரம், மருந்து தேவையில்லை. அடிஉரம் மட்டும் மாட்டு எரு, குப்பை ஓர் ஏக்கருக்கு 2 டிராக்டர் லோடு இடுகின்றனர்.

தகவல் : கெம்பா, பெட்டிக்கடை, பிஜலெட்டி, பர்கூர், ஈரோடு மாவட்டம்

உயிர்சக்தி வேளாண்மையில் உலகளாவிய பயிற்றுநர்

19 வது நூற்றாண்டில் உயிராற்றல் வேளாண்மை என்ற முறையை ருடால்ப் ஸ்டெயினர் என்ற ஆஸ்திரிய நாட்டு நிபுணர் உருவாக்கினார். நவக்கிரகங்களின் நிலைப்பாடு முறையில் உயிர்சக்தி வேளாண்மைப் பஞ்சாங்கத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தினார். இந்த முறை உலகெங்கிலும் பரவி விட்டது. உயிர்சக்தி வேளாண்மை முறையில் விளைந்த உணவுப் பொருட்களுக்கு உலக சந்தையில் நல்ல விலையும், மதிப்பும் உள்ளது. திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டில் வசித்து வரும் திரு. ஜெயகரன் பொறியியல் பட்டம் பெற்று கொடைக்கானல் பகுதியில் பழனிமலை இயற்கை வனப்பாதுகாப்பு சமூகபணியில் பணிபுரிந்து பின் உயிர்சக்தி வேளாண்மையில் முழு ஈடுபட்டு சிறந்த பயிற்சியாளராக பல மாநிலங்கள், நாடுகளுக்கும் சென்று வருகிறார். குறிப்பாக சீனா, பிலிப்பைன்ஸ், தைவான் போன்ற நாடுகளுக்கு பயிற்சி அளிக்க சென்று வருகிறார்.

பீட்டர் புரக்ட்டர் என்ற நியூஜிலாந்து நாட்டு நிபுணரிடமிருந்து நேரடி பயிற்சி பெற்று கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தனது சொந்த கொடைக்கானல் வத்தலக்குண்டு பண்ணையில் உயிர் சக்தி வேளாண்மை நுட்பங்களை பரிசோதித்து அனுபவம் பெற்றுள்ளார்.

இவரது அனுபவப்படி பூமி உயிரோட்டமுள்ள ஜீவன். இதற்கு செயற்கை உரங்கள், மருந்து கொண்டு மாசுபடுத்தாமல் பாதுகாக்க வேண்டும்.

சீனா போன்ற நாடுகளில் சராசரி இரசாயன உரம் ஹெக்டருக்கு 225 கிலோவும், இரசாயன மருந்து 12.50 கிலோவும் பயன்படுத்தப்படுகிறது. இதைவிட இந்தியா பரவாயில்லை. சீனாவில் குளிர்காலத்தில் மண்ணில் வெப்பம் தர பிளாஸ்டிக் சீட் துகள்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்கின்றனர். சீனாவில் மூன்றில் ஒரு பகுதி மிக மோசமான நிலைக்கு மாசுபடுத்தப்பட்டு விட்டது. நமது நாட்டில் இயற்கைக்கு சிறிது சிறிதாக மாறிக் கொண்டிருக்கின்றோம். உயிர் சக்தி வேளாண்மை ஊக்கப் பொருட்களைத் தயாரித்து விநியோகித்து வருகிறார்.

1. கொம்பு சாண உரம் (B.D. 500),
2. கொம்பு சிலிகா உரம் (B.D. 501) – கால்சியம்
3. சாண மூலிகை உரம் (CPP Manure)
4. கம்போஸ்ட் உரம் தயாரிக்க பயன்படும் தயாரிப்புகள் (வெளேரியன் உரம் Valerian BD 507, Dandelion BD 506, Oak bark BD 505, Stinging nettle BD 504, Chamomile BD 503, Yarrow BD 502)

ஜெயகரன், குறிஞ்சிப்பண்ணை, பெரியகுளம் ரோடு கெங்குவார்பட்டி அஞ்சல், தேனி மாவட்டம் –625203

செல் : 9976145605, 04543262469

கெட்ட ஆவிகளை விரட்ட ஒரு ஆப்ரிக்கா பச்சை புல்

ஆப்பிரிக்கநாடுகளில் குறிப்பாக கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் குட்டம்மா எனப்படும் ஒரு வகை பச்சை புல்லுக்கு கெட்ட ஆவிகளையும் சூன்யங்களையும் விரட்டும் சக்தி படைத்ததாக அங்குள்ள மக்களுக்கு ஒரு நம்பிக்கை இருந்து வருகின்றது. இந்த நம்பிக்கை காலம் காலமாகவே அவர்களிடம் தொடர்ந்து இருந்து வருகின்றது. ஆப்பிரிக்காவை தாயகமாய்க் கொண்ட உயர்ந்து வளரும் குணம்

படைத்த இந்த வகை புல் குளிர்காலம் மற்றும் கோடைக்காலங்களில் நன்கு வளரும் திறன் படைத்தது வறட்சிக்காலங்களிலும் இந்த புல்லானது வாடி விடாமல் செழித்து வளரும் குணம் படைத்தது. இந்த புல்வகை எக்காலத்திற்கும் ஏற்ற ஒரு கால்நடை தீவனப்பயிரும் கூட. குட்டம்மா என பிராந்திய மொழியில் அழைக்கப்பட்டு வரும் இந்த புல்லை சிறு சிறு கட்டுக்களாக கட்டி சந்தையில் விற்பனை செய்து வருகின்றனர். கிராமமக்கள் மட்டுமன்றி நகரத்தில் வசிப்போரும் தினசரி ஒரு கட்டு விரும்பி வாங்கி வீட்டிற்கு கொண்டு செல்கின்றனர். அவ்வாறு வாங்கிய பச்சைபுல் கற்றை வீட்டினுள் தரையில் பரப்பி விடுகின்றனர் அல்லது கற்றையாக வீட்டினுள் ஒரு மூலையில் வைத்து விடுகின்றனர். இந்த பச்சைப் புல்லிலிருந்து கிளம்பும் ஒரு வகையான இனிய நறுமணம் வீடு முழுதும் கமழும். தீயசக்தி ஏதேனும் வீட்டினுள் புகுந்து இருந்தாலும் சூன்யங்களின் தாக்கம் இருந்தாலும் அவற்றிலிருந்து விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கை இங்கே இருந்து வருகின்றது. இதனை பலரும் நம்புகின்றனர். இன்றும் நம்பி வருகின்றனர். மற்றும் பலர் இந்த புல் பரப்பில் அமர்ந்து மலைக்காடுகளில் இயற்கையாக வளர்ந்த புன்னா எனும் காப்பிக்கொட்டையை அவ்விடத்திலேயே வறுத்து இடித்து பொடியாக்கி சூடான பானமாக குடும்பத்தாருடனும் சுற்றத்தாருடனும் அருந்தும் வழக்கம் எல்லா வீடுகளிலும் இருந்து வருகின்றது. இந்த பச்சை புல்லின் நறுமணம் காப்பிக்கொட்டை கசாயத்திற்கு கூடுதல் சுவையையும் அளிக்கின்றது. மறுநாள் உலர்ந்த புல்தாள்களை கால்நடைகளுக்கு தீவனமாக அளித்து மகிழ்கின்றனர்.

இந்த நம்பிக்கையின் பின்னணியில் ஆன்மீகம் மற்றும் அறிவியல் இரண்டு காரணங்களும் உள்ளன என்று கூறலாம். ஆன்மீகரீதியாக. இந்த புல் கெட்ட ஆவிகளை விரட்டும் சக்தி கொண்டது என்று நம்பப்படுகிறது. அறிவியல் ரீதியாக இந்த புல்லில் ஒரு வகையான இயற்கை ஈரப்பதம் உள்ளது. இந்த ஈரப்பதம் காற்றில் உள்ள தீயசக்திகளை உறிஞ்சி அவற்றை வீட்டினுள் நுழைய விடாமல் தடுக்கிறது என்று நம்பப்படுகிறது. இந்த நம்பிக்கை ஆப்பிரிக்க மக்களின் வாழ்வில் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது.

– கோமதிநாயகம், செல் : 9994694076,
எத்தியோப்பிய பல்கலைகழகம்

கால்நடைகளுக்கு புண்களில் புழு வைத்தால் இயற்கை முறையில் வைத்யம்

ஒரு பெரிய மாட்டிற்கு புண் இருந்தால் அதில் புழு இருக்கும். அதை எப்படி பார்ப்பது அந்த புண்ணை நாக்கு வைத்து நக்க பார்க்கும் அல்லது அந்த இடத்தைவ் சுற்றிவ் சுற்றி வரும். பாதிக்கப்பட்ட மாடுகளில் 80 சதவீதம் தண்ணீர் குடிக்கும் 20 சதவீதம் தண்ணீர் குடிக்காது. இதே புண் வைத்த கன்றுக்குட்டி, ஆட்டுக்குட்டிக்கு புண்ணில் புழு இருந்தால் ஒரே இடத்தில் அமைதியாக படுத்திருக்கும். அந்தக் குட்டிகளுக்கு தொப்புளில் இரத்தம் வந்தால் புண் உள்ள இடத்தில் புழு இருக்கும். இதற்கு வைத்யம்:

தேவையான பொருட்கள்: சுண்ணாம்புக்கல் கரைசல் 25 கிராம், தேங்காய் எண்ணெய் 50 மி.லி, குப்பைமேனிசாறு 1/2 டம்ளர், கற்பூரம் 10 எண்ணம். ஒரு சட்டியில் தேங்காய் எண்ணெய் ஊற்றி அதில் கற்பூரம், சுண்ணாம்புச்சாறு, குப்பைமேனிச்சாறு ஊற்றி நன்றாக காய்ச்சி வெது வெதுப்பாக எடுத்து அந்த புண்ணில் தடவினால் புழு வெளியே வந்த பிறகு வேப்பெண்ணெயில் மஞ்சள் பொடியை 2 வேளை போட்டு வந்தால் புண்ணில் இருந்த புழு இறந்து வெளியே வந்து விடும். புண் சரியாகிவிடும். இந்த முறை சித்த மருத்துவ முறைப்படி செய்யப்படுகிறது. இதையே மெடிக்கல்களில் அதாவது உண்ணி மருந்து (கிளீனர் 10 மி.லி) அளவு அந்த புண்ணில் 5 சொட்டு விட்டால் புண்ணில் இருந்த புழு வெளியே வந்து விடும் பிறகு வேப்பெண்ணெயில் மஞ்சள்பொடி கலந்து போட்டால் புண் ஆறி விடும்.

முரளி, 14/199 தாழக்கன்விளை, முள்ளாங்கி குமரி மாவட்டம்

செல் : 9488317011, 9500122192

நாட்டுக்காளை மூலம் பசுக்களுக்கு இனவிருத்தி செய்தல்

திருப்பூர் மாவட்டம், சின்னதாராபுரம் நஞ்சத்தலையூர், காத்தசாமிபாளையம் கிராமத்தில் திருமதி சௌந்திரம் (வயது 56) நாட்டுக்காளை பராமரித்து வருகிறார். இவர் 6வது வரை படித்துள்ளார். கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக பசுக்களுக்கு சினைபிடிக்க காங்கேயம் மாட்டு இனக்காளைகளை வைத்து இனப்பெருக்க சேவை செய்து வருகிறார்.

இவர் இப்பகுதியில் சுமார் ஒரு லட்சம் பசுமாடுகளுக்கு சினைபிடிக்க வைத்துள்ளார். இதற்காக சுத்த காங்கேய இனக்காளை மாடுகளை கருப்பணவலசு திரு. நடராஜன் உதவியுடன் தேர்வு செய்து சினைபிடிக்க பழக்கப்படுத்தியுள்ளார். கரூர், பொள்ளாச்சி போன்ற பகுதிகளிலிருந்தெல்லாம் பசுமாடுகள் கொண்டு வந்து காளைக்கு போட்டு செல்வர்.

ஆரம்பத்தில் அதிக பசுமாடுகள் வளர்த்த சமயம் இவருக்கு காளை தேவைப்பட்டது. நாட்டு மாட்டு காளையை தேர்வு செய்து வைத்து உபயோகித்து வந்தார். நாட்டு பசுக்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து இவருடைய இருப்பிடத்திற்கு காங்கேயம் காளைமாடு. காளை மூலம் இனப்பெருக்கம் செய்ய பசுக்களை சினைக்காக கொண்டு வந்தனர். இவர் கொரோனாவிற்கு முன்னர் 13 காளைகள் வரை வைத்து இனப்பெருக்கம் செய்து வந்தார். மாடுபராமரிப்பு செலவைக்குறைக்க தற்சமயம் 4 காளைகளை வைத்து இனப்பெருக்க சேவை செய்து வருகிறார். தற்பொழுது இவரது சேவை மூலம் நாட்டு பசுக்கள், காளைகள் பல பகுதிகளில் உற்பத்தியானதால் ஆங்காங்கே இவரது காளைக்குப் பிறந்த வர்க்கம் மூலம் இனப்பெருக்க சேவையும் நடைபெற்று வருகிறது. இவரது சேவையைப் பாராட்டி 2010ல் இவருக்கு பாரம்பரிய கால்நடை இன பாதுகாவலர் என்ற சான்றிதழும், விருதும் வழங்கப்பட்டது.

இவருக்குத் துணையாக இவரது கணவர் திரு. ராமசாமி காளைமாடுகளை கொரங்காட்டில் (மேய்ச்சல் நிலத்தில் கொளுக்கட்டைப்புல், வேலாமரம் வளர்ந்திருக்கும். 14 ஏக்கர் சொந்தநிலம், 40 ஏக்கர் குத்தகை நிலம் உள்ளது) மேய்த்து பராமரித்து வருகிறார். இவர் காளைக்கு தினமும் இரவில் ஒரு கிலோ பருத்திவிதையைத் தீவனமாகத் தருகிறார். இத்துடன் இவரது 2 குமாரர்களும் இதற்கு உதவியாயிருந்தனர். தற்பொழுது இன்ஜினியர் பட்டம் பெற்று சென்னையில் வேலை பார்த்து வருகின்றனர்.

காளை சுமார் 1 1/2 வருடத்திலிருந்து 17 வயது வரை பசுக்களில் தாவும். ஒரு நாளைக்கு ஒரு காளை 2 பசுக்கள் வரை சினைபிடிக்க விடப்படுகிறது. வருடாவருடம் கொரங்காட்டை உழுது கொள்ளும், நரிப்பயறும் விதைத்து 2 வாரம் கழித்து மேய்க்க விடுகிறார். சோளம் விதைத்தால் 3 1/2 மாதம் கழித்து கதிர் அறுவடைக்குப்பின்னர் மாடுகளை மேயவிடுவர். ஓர் ஏக்கருக்கு 15 வீசு தட்டை (3000 கிலோ) கிடைக்கும்.

இவரைத்தேடி மாதந்தோறும் 100–150 பசுமாடுகள் சினைக்கு விழ பிடித்து வருவார்கள். இதில் பிறந்த கிடரி கன்று ஈன்றபின் 2 – 3 லிட்டர் வரை பால் தரும். இவரிடம் சீனிவாசன் என்ற பெயர் கொண்ட காராம்பசுக் காளை இருந்தது. இதன் மூலம் நூற்றுக்கணக்கான காராம்பசுக்கள் உருவாகி உள்ளன. இந்தக்காளையை சேலத்தில் சிவன் கோவிலுக்கு கொடுத்துவிட்டார். இதனுடைய வர்க்கத்தில் உள்ள பேரன் காளை தற்பொழுது இவரிடம் உள்ளது. காராம்பசுக்கள் ஒரு லட்சத்திற்கும் அதிகமாக விற்பனைக்குப் போகும். இவர் ஒரு மாட்டிற்கு சினைக்கு விழ ரூ. 500 வாங்கிக் கொள்கிறார். வருடத்திற்கு சுமார் ரூ. 3 லட்சம் வருமானம் எடுக்கிறார். இதனை வைத்து

கோடை காலத்தீவனத்திற்கு பணம் சேகரித்து வைக்கிறார். பசுமாடு சினைபிடிக்க அல்லது கருகலையாமலிருக்க சினைக்குப் போடுமுன் அல்லது போட்ட பின் பசுக்களுக்கு வேப்ப எண்ணெய் 100 மி.லியும் சோற்றுக்கற்றாழை ஒரு மடலும் தரும்முறை கடைபிடிக்கப்படுகிறது.

பசு மாடு பருவத்திற்கு வந்த அறிகுறி தெறிந்தபின் 2 நாட்களுக்குள் காளையைச் சேர்க்க வேண்டும்.

திருமதி சௌந்திரம், க/பெ. ராமசாமி
காத்தசாமிபாளையம், கே.பி. சத்திரம், நஞ்சத்தலையூர் அஞ்சல், சின்னதாராபுரம் வழி, தாராபுரம் மாவட்டம்
குமாரர் : வீராச்சாமி செல் : 7010867787

யானைகள் மலைகளில் விரும்பி உண்ணும் தாவரங்கள்

அரசமரம், ஆலமரம், உசிலைமரம், ஆச்சா, வாகை, வேலாமரம், மூங்கில், இலவமரம், போன்ற மரத்தின் தழைகளை விரும்பி உண்ணும். இதை நான் யானைகள் காணப்படும் வனப்பகுதிக்கு சென்று மேய்ந்து கழித்த தழைகளை அடையாளம் பார்த்து தெரிந்து கொண்டேன். யானை ஒரு நாளைக்கு தீனிக்காக 30–40 கி.மீ. வரை நடந்து செல்கிறது. 300–400 கிலோ தீவனம் எடுத்துக் கொள்ளும்.

பாக்கியலட்சுமி, வானவராயர் வேளாண்மை நிறுவனம், பொள்ளாச்சி

பாரம்பரிய அறிவும், பயன்பாடும்

நமது சமுதாயத்தில் நிலவி வரும் பாரம்பரிய ஞானம் சிலரால் கடைபிடிக்கப்பட்டு அனுபவத்தில் விளைந்த பழக்கமாகும். சில காலப்போக்கில் சரியானபடி கடைபிடிக்காமலிருந்தால் அழிந்து விட்டது. அல்லது அழியும் தருணத்தில் உள்ளது எனலாம்.

பிரசவம் பார்க்கும் உள்ளூர் பெண்கள் தற்போது யாருமலில்லாமல் போய்விட்டனர். ஒரு சமயம் ஜாக்கண்ட் மாநிலத்தில் நடைபயணம் மேற்கொண்டபோது ஒரு கிராமத்தில் திண்ணையில் அமர்ந்திருந்தேன். அருகில் உள்ள வயதான பிரசவம் பார்க்கும் பெண்மணி கூறிய அனுபவத்திலிருந்து குழந்தை பிறக்கும் சமயம் இருட்டான அறையில் தான் தாய் இருக்க வேண்டும். சிசுவானது 9 மாதம் கர்ப்பப்பையினுள் இருட்டினுள் இருந்து உடனே வெளிச்சத்திற்கு வருவதால் பயமும் பீதியும் குழந்தைக்கு ஏற்படும். தொப்புள் கொடியை பிறந்தவுடன் உடனே அறுத்துவிடாமல் சில நிமிடங்கள் 8–10 நிமிடங்கள் கழித்து சுருங்கி விரிவது நின்றபின் அறுக்க வேண்டும். இல்லையெனில் குழந்தைக்கு அச்சமும் அலர்ஜியும் உண்டாகும். குழந்தை பிறக்கும் சமயம் தொங்கும் கயிறு தாய்க்கு முன்னர் காணப்படும். இதனை பிடித்துக்கொண்டு தாய் குழந்தையை குறைவான வலியுடன் பெற உதவும். மகப்பேறு நிலையங்களில் தாய் படுத்த நிலையிலே குழந்தை பெறும் முறையே காணப்படுகிறது. இது வலியைக் குறைக்காது.

ஒரு வீட்டில் சமையல் செய்யும் சமயம் ஒரே பதார்த்தம் தயாரிக்க தேவையான இடுபொருட்கள் ஒன்றாக இருந்தாலும் தாய், மகள், அக்கா, பாட்டி என யார் சமைக்கிறார்களே அவர்களுக்கு தயாரித்த உணவில் வித்தியாசம் ருசி, வாசனையில் தெரியும். இது ஒவ்வொருவரின் தனித்தன்மை, திறனை வெளிக்காட்டும். இதுபோக இவர்களின் புற, அக தூய்மை, பயன்படுத்தப்படும் விறகு, எரிபொருளால் பல மாறுதல்களுக்குள்ளாகும்.

ஐயாத்துரைக்கோனார் என்ற வைத்யர் பெரும்பலான பத்திய உணவிற்கு வெள்ளை எருக்கு விறகைப் பயன்படுத்தி சமைக்கக் கூறுவார். இதன் மகத்துவம் குணமானோர்க்கு தெரிந்திருக்கும். சிலர் செருப்பணியாமல் இருந்து எந்த தாவரத்தையும் வேருடன் பிடுங்காமலிருப்பர். வேருடன் பிடுங்குவது தாவர இனம் அழிவதற்கு வழிவகுத்தலுடன் சாத்வீக வாழ்விற்கு யாரையும் எதையும் அழிக்காமலிருக்க உதவும்.

ஒவ்வொர் ஊரிலும் நோய் பிரச்சனைகளுக்கு பாரம்பரிய அறிவு உண்டு. ஆனால் அதை உள்ளூரிலேயே தெரிந்து கொள்ள அவர்களால் இயலவில்லை. ஒரு முறை கேரளாவில் கால்காணை வாய்காணை நோய்க்கு நாட்டு வைத்யம் பற்றி எடுத்துரைக்க சென்றிருந்தோம். நாங்கள் சொல்லும் வைத்யமுறையைவிட உள்ளூர்/ பக்கத்தூர் வைத்யர் கூறிய வைத்திய முறை

எளிமையாக இருந்தது. ஆனால் அந்த வைத்யரை அடையாளம் பார்த்து கற்றுக்கொள்ள எங்கள் மூலம் தான் அந்த ஊர்காரர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. இது எங்கள் பணியின் சிறப்பு எனில் அது மிகையாகாது.

–அனில்குப்தா, விவேகானந்தன்

காங்கேயம் காராம்பசு, செவலைப்பசுக்களை இனப்பெருக்கம் செய்தல்

தமிழ்நாட்டில் காங்கேயம் பசுக்கள் அதிகளவில் 2 லிட்டருக்கு மேல் பால் கறக்காது. இந்தப் பசுக்களில் பால் உற்பத்தியைக் கூட்ட நல்ல தரமான சுத்த காளை மூலம் இனப்பெருக்கம் செய்தல், தீவனப் பராமரிப்பு, கொரங்காட்டில் இயற்கை மேய்ச்சல் முறை இவைகளைக் கடைப்பிடித்து சுமார் 5 லிட்டர் பால் கிடைக்க திரு. நடராஜன் முயற்சி செய்து வெற்றி கண்டார். இவர் சின்னத்தாராபுரம் பகுதியில் காத்தசாமிபாளையம் (கருப்பணவலசு) கிராமத்தில் வசித்து வருகிறார். இவருக்கு 2012ல் பாரம்பரிய காங்கேய இனக்காவலர் விருது சேவா மூலம் வழங்கப்பட்டது. இவர் கிராமப் பஞ்சாயத்து தலைவராக இருந்து கிராம முன்னேற்றத்திற்கு பல சேவைகளைச் செய்துள்ளார். தற்சமயம் இவரிடம் 4 பசு மாடுகள் மட்டும் உள்ளன.

ஆள் பற்றாக்குறை, கூலியாட்களின் சம்பளம் போன்ற பிரச்சனைகளால் மாடுகளின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொண்டார். இவர் வீட்டில் 2 நாட்கள் தங்கியிருந்த சமயம் எங்களுடன் வந்த ஒரு நண்பருக்கு பல நாட்கள் சளித்தொல்லை இருந்தது. இவர் பண்ணைப்பால், தயிர் உணவில் சேர்த்துக் கொண்ட பின் சளி முற்றிலுமாக நின்றுவிட்டது. இயற்கையாக மேய்ந்து கறந்த நாட்டு மாட்டுப்பாலின் மகத்துவத்தை உணர முடிந்தது.

நடராஜன், கருப்பணவலசு, நஞ்சத்தலையூர், சின்னத்தாராபுரம், திருப்பூர் மாவட்டம்.

செல் : 9443946600

சளி, இருமல், வறட்டு இருமல் இருந்தால்

மழையும், வெயிலும் மாறி மாறி இருக்க சளி,இருமல் இருந்தால் ஒரு வெற்றிலை எடுத்து அதன் முனை, வாலை கிள்ளி விட்டு அதில் ஒரு ஏலக்காய், 5 மிளகு, ஒரு கிராம்பு அதாவது பெரியவர்கள் என்றால் மிளகு கூட பயன்படுத்தலாம். அதில் சிறிது தேன் சேர்த்து வெற்றிலை பீடாவாக மடித்து ஒரு நாளைக்கு ஒரு வேளை என்று 3 நாட்கள் சாப்பிட்டு வந்தால் சளி, இருமல் சரியாகும். முதலில் இனிப்பாக இருக்கும் போக போக காட்டமாக இருக்கும்.

– வாட்ஸ்அப் செய்தி

பிரதோஷ நாளில் மரக்கன்று நடவு செய்யலாமா?

– குருஜெகந்நாதன், சொக்கலிங்கபுரம், சாத்தூர்.

பொதுவாக மரக்கன்றுகளை கீழ்நோக்கு நாட்களில் நடுவது சிறந்தது. இதனால் வேர் வளர்ச்சி கூடும். பிரதோஷம், அமாவாசைக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் வரும். தேய்பிறை பிரதோஷத்தில் கீழ்நோக்கு நாளும் சேர்ந்திருப்பது சிறப்பாகும்.

– ஆசிரியர்

குழந்தையின்மைக்கு வைத்யம்

பூண்டு 5 பல், சீரகம் 1/2 ஸ்பூன், மிளகு 5, இலந்தைஇலை 20 சேர்த்து அரைத்து 3 நாட்கள் வீட்டுக்கு விலக்கான நாட்களில் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர வேண்டும். இதனால் கர்ப்பப்பையிலுள்ள கழிவு வெளியேறும். பின்னர் உடலுறவு கொண்ட பின் கருத்தரிக்க வாய்ப்புண்டு.

டி. குப்புசாமி, கங்கவரம், கணக்கன்குப்பம்,
செஞ்சி தாலுகா, விழுப்புரம் மாவட்டம்– 604151

எம்.எஸ். சுவாமிநாதன் – வேளாண் விஞ்ஞானி (1925 – 2023)

டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் உலகறிந்த வேளாண் வல்லுநர். நமது நாட்டில் இந்திராகாந்தி பிரதமராக இருந்த சமயம் இவர் மத்திய வேளாண்மைத்துறை அமைச்சகத்தில் செயலாளராக பணிபுரிந்தார். அச்சமயம் வேளாண்மை மந்திரியாக சி.சுப்பிரமணியம் இருந்தார். இவ்விருவரும் ஒன்று சேர்ந்து வேளாண்மையில் பல்வேறு புரட்சித் திட்டங்களை கொண்டுவந்தனர். அச்சமயம் நிலவிய உணவுப்பற்றாக்குறை, பசி, பஞ்சம் இவைகளிலிருந்து மீள இவர் வெளிநாட்டிலிருந்து உயர்ரக நெல்மணி, கோதுமை வித்துக்களை தருவித்து நாட்டில் உணவு உற்பத்தியை உயர்த்த பாடுபட்டார். பிலிப்பைன்ஸ் நாட்டில் உலக நெல் ஆராய்ச்சி நிறுவனம், ஐ.நா. சபையின் அங்கமான உலக உணவு நிறுவனத்தில் செயல் இயக்குனராகவும் செயல்பட்டு பல நாடுகளில் உணவு உற்பத்தியை அதிகரிக்க பாடுபட்டார்.

இவருக்கு உலக உணவு விருது 1987ல் வழங்கப்பட்டது. பின்னர் அரசுத்துறையிலிருந்து ஓய்வு பெற்ற பின் தான்பெற்ற விருதுத் தொகையைக் கொண்டு எம்.எஸ்.சுவாமிநாதன் அறக்கட்டளை ஒன்றை நிறுவி நீடித்த நிலைத்த வேளாண்மைக்கும், வறுமை ஒழிப்பிற்கும் பல்லுயிர் பெருக்கத்திற்கும் சேவை செய்து வந்தார். இவர் உலகின் 70க்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்களிலிருந்து கௌரவ டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். உலகளவில் பல்வேறு விருதுகளையும் பெற்று நமது நாட்டிற்கு புகழ் சேர்த்துள்ளார். நமது நாடும் இவருக்கு பத்மவிபூஷன் விருது கொடுத்து கௌரவித்துள்ளது.

இத்தனை பேரும், புகழும் இருந்தாலும் யாருடனும் பழகுவதற்கு எளிமையானவர். எந்தவொரு நபரும் வேளாண்மை சம்பந்தமாக கடிதம் எழுதினாலும் இவர் பதில் எழுதத் தவறியதேயில்லை.

நமது நாட்டில் விவசாயிகளின் தேசியக் கொள்கை (National Policy for Farmers 2007) உருவாக்க இவர் தலைவராக நியமனம் செய்யப்பட்டார். நமது நாட்டில் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் மானியங்கள் இதனடிப்படியிலேயே செயல்படுத்தப் படுகிறது. அச்சமயம் கிடைக்காரர்களை விவசாயிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு பாரம்பரிய மேய்ச்சலுக்கு உதவ வேண்டும் என்ற எனது கோரிக்கையையும் ஏற்றுக்கொண்டு சேர்த்துள்ளார்.

கர்நாடக மாநிலத்தில் 2018ல் சிர்சி மாவட்டத்தில் பாரம்பரிய கால்நடை மூலிகை வைத்யம் பயிற்சிக்கு சென்றிருந்தேன். அப்பொழுது பன்வாட் என்ற ஊரில் ஒரு சிவன் கோவில் இருந்தது. அந்தக் கோவிலை பரசுராமர் ஸ்தாபித்ததாக கூறினார்கள். அந்தக்கோவிலில் சென்று வழிபட்டு இரவு சிர்சியில் தூங்கிவிட்டேன். அப்பொழுது தூக்கத்தில் வந்த கனவில் எம்.எஸ்.சுவாமிநாதனிடம் சென்று அவரை குருவாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கூறி விழித்துவிட்டேன். இந்தக் கனவு கண்ட சில மாதங்களில் சென்னைக்குச் சென்று அவரைப் பார்க்க முயற்சி செய்தேன். அப்பொழுது அவர் ஒரு சிறிய விபத்தினால் கால் நடக்க முடியாமல் மருத்துவமனையில் சில நாட்கள் இருந்துவிட்டு வீடு திரும்பியிருந்தார். தேனாம்பேட்டையில் அவர் வீட்டிற்குச் சென்று அவருடைய பாதத்தைத் தொட்டு வணங்கி நின்றேன். அவரும் கனிவுடன் சென்னைக்கு வரும்போதெல்லாம் எங்கள் இடத்திற்கு வந்துவிட்டுச் செல்லுங்கள் என்று கூறி ஆசீர்வதித்தார்.

நான் மதுரை திரும்பியதும் திடீரென்று எனக்கு காய்ச்சல், உடம்புவலி வித்தியாசமாக இருந்தது. எம்.எஸ்.சுவாமிநாதனுடைய உடல்வலி எனக்கு மாறியதாக நினைத்துக்கொண்டேன். இது இரண்டு நாட்கள் கழித்து சரியாகிவிட்டது. எல்லாம் சிவன் செயல்.

– பெ. விவேகானந்தன், சேவா

நிகழ்ச்சி நிரல் அறிவிப்பு

நாள்	இடம்	நிகழ்ச்சி விபரம்	தொடர்பு முகவரி
21–23 டிசம்பர் 2023	இந்தியக் கால்நடை புல்வெளி, தீவனப்புல் ஆராய்ச்சி நிறுவனம் Jhansi. (U.P.) ஜான்சி. உத்திரப்பிரதேசம்	கால்நடை மேய்ச்சல் நிலம், பொது இடங்கள் பாதுகாத்தல் கருத்தரங்கம்.	சேவா, மதுரை.

Digital support is provided by : www.NamFarmers.com Cell : 91 948 968 7000
E-mail : support@namfarmers.com

நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம் :

	வருட சந்தா ரூபாய்	ஆயுள் சந்தா ரூபாய் :
நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள்	200	2000
விவசாயிகள் / தனிநபர்கள்	150	1500
தனிப்பிரதி	30	----
15 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1250)	1500	----
+ (கொரியர் செலவு ரூ. 250)		

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் "சேவா"
மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடை கிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082 , 2380943

நூல் அஞ்சல்

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

பெறுநர்

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 2380943
Email : vivekseva@gmail.com
website : www.sevango.in